# செம்பதாகை

மலர்: 3
இதழ்: 9-10
1981 புரட்டாசி-ஐப்பசி
விலை சதம்: 75
புரட்சிகர வெகுஜன ஏடு


## நாடு பெரும் சகதிக்குள் மூழ்கிறது

# ராணிக்கு ராஜ உபசாரம்!

நாடு பெரும் சகதிக்குள் மூழ்கிக்கொண்டிருக்கின்றது. அதை மறைப்பதும், மக்களின் கவனத்தை அதிலிருந்து திசைதிருப்புவதும் யூ.என்.பி. ஆட்சிக்கு ஒரு அவசியத் தேவையாகும். ஆதலால் இங்கிலாந்து மகாராணியாரை வரவழைத்து பெரும் ராஜ உபசாரம் நடாத்தப்படுகிறது:

இலங்கையில் சர்வசன வாக்குரிமை கிடைத்த ஐம்பது ஆண்டுகள் நிறைவைக் கொண்டாடுவதற்காக இங்கிலாந்தின் மகாராணியார் நமது நாட்டிற்கு ஒரு குறுகிய கால விஜயம் ஒன்றை மேற்கொள்கின்றார். அவர் ஒரு ஊடுருவல்காரராக அல்லாது விருந்தாளியாகவே வருகின்றார். வேறு தேவைக்காக இங்கிலாந்து சென்று ராஜ திருமணத்திலும் கலந்து கொண்ட ஒரு பிரபல்யம் அற்ற நபரைப்போல மகாராணியின் விஜயம் அமையவில்லை.

மகாராணியார் என்பதற்காக நாம் அவர்மீது விரோதம் கொள்ளவில்லை. அவர் ஒரு நாட்டின் தலைவி. உண்மையில் அவர் பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் ஒரு சின்னம். எமது தேசம் உட்பட பல தேசங்களை காலனிப் பிடிப்பின் கீழ் வைத்திருந்த பிரித்தானிய அரசாங்கத்தின் தலைவி.

தனது செலவில் மகாராணி இலங்கைக்கு விஜயம் செய்வதையிட்டு எமக்கு ஆட்சேபனை எதுவும் இல்லை, ஆனால் நாடு பெரும் பங்கலோட்டடைந்துள்ள இன்றைய நிலையில் இந்த விஜயத்திற்காக ஆடம்பரமான முறையில் செலவு செய்யப்படவுள்ள செலவுகளைப் பற்றியே நாம் சுட்டிக்காட்டுகின்றோம். அரசாங்க விருந்தாளியாக இருக்கப்போகும் மகாராணிக்கு உல்லாசமான தனிப் புகையிரதம் தொடக்கம் தனியான மலசலகூட வசதிகள் வரையானவேறுபல தேவைகளுக்கும் பல லட்சம் ரூபாய்களை நாடு விரயம் செய்யப்போகிறது.

றின் ஒருங்கிணைந்த தாக்கங்களின் விளைவாக பெரும்பான்மை மக்கள் பரமஏழைகளாகி உயிர் வாழ்வதற்கு முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

யூ.என்.பி. போன்ற ஒரு கட்சி எவ்வாறு சர்வஜன வாக்குரிமை கிடைத்த ஐம்பது ஆண்டுகள் நிறைவைக் கொண்டாட முடியும்? நாடாளுமன்ற ஆசனங்கள் காலியானதும் நடைபெற வேண்டிய இடைத் தேர்தல்களை இரத்துச்செய்து மக்கள்தமது வாக்குரிமையைப் பிரயோகிப்

மையை பிரயோகித்து வேலை நிறுத்தம் செய்த 50,000 ஊழியர்களை வேலைநீக்கம் செய்ததும் இந்த யூ.என்.பி. தான்.

தமது உழைப்பு முழுவதையும் இந்த நாட்டுக்கு அர்ப்பணித்து நாட்டின் தேசிய செல்வத்தின் பெரும் பகுதியை உழைத்துத்தரும் தோட்டத் தொழிலாளர்களின் பெரும் பகுதியினர் தமது அடிப்படை உரிமையான பிரஜா உரிமையை இழந்து இருக்கையில் ஐம்பது ஆண்டுகள் சர்வஜன வாக்குரிமையைப்பற்றி கூப்பாடு போடுவதற்கு யூ.என்.பி.க்கு என்ன உரிமை இருக்கிறது. இதைவிட அந்த மக்களின் உயிர்களுக்கும், உடமைகளுக்கும் பாதுகாப்பைத் தானும் வழங்கத் தவறியுள்ளதும் இந்த யூ.என்.பி.யாகும். அதேபோல் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் இன அடிப்படையிலான பல பிரச்சினைகளின் மறைமுக நாயகனும் அதே யூ.என்.பி. தான். இவற்றை எல்லாம் சர்வசன வாக்குரிமையின் 50 ஆண்டுகளை நினைவு கூர்ந்து

## மகாராணி ஏகாதிபத்தியத்தின் ஒரு சின்னம்

யூ.என்.பி.யின் சொந்தக் கொள்கைகளினால் பெரும்பான்மையான மக்கள் மோசமான வறுமைநிலைக்குள் தள்ளப்பட்டுள்ளனர். இவ்வேளை இந்த மாதிரியான தமாஷா விளையாட்டுக்களில் பெரும் தொகையைச் செலவு செய்ய யூ.என்.பி. ஆட்சிக்கு எந்த அருகதையும் கிடையாது. ரூபாவை மதிப்பிறக்கியமை, பற்றுக்குறை வரவுசெலவுத் திட்டங்கள், வரவுசெலவுப் பற்று குறையை நிதிப்படுத்துவதற்காக அடிக்கடி திறைசேரி உண்டியல்களின் உதவியை நாடியமை, ஆகியவற்

பதைத் தடை செய்தது யூ.என்.பி.யே. அரசாங்க எம்.பீக்கள் எதிர்க் கட்சிக்குத் தாவுவதைத் தடை செய்த அதேவேளை எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் அரசாங்கக்கட்சியில் சேரும்போது அவர்களது ஆசனங்கள் பறிபோகாத வகையில் அரசியல் அமைப்பு சட்டத்தை திருத்தம் செய்ததும் யூ.என்.பி.யே. ஏகாதிபத்திய நாடுகளில்கூட அங்கீகரிக்கப்பட்ட உரிமையும் சர்வதேச தொழில் ஸ்தாபனத்தால் உத்தரவாதம் செய்யப்பட்டதுமான வேலை நிறுத்தம் செய்யும் உரி

மகாராணியை அழைத்து வந்து விழா நடாத்துவதால் மறைந்துவிடப் போவதில்லை.

எவ்வாறுயினும் ஒரு பிரித்தானிய மகாராணியாருக்கு இவ்வளவு ஆரவாரம் தேவைதானு? எமது நாடு இப்போது ஒரு குடியரசு, அவருக்கு விஸ்வாசமாயிருக்க வேண்டியது இல்லை. எமது நாடு ஒரு பிருத்தானிய காலனியாக இருந்தபோது நிலைமை வேறு விதமாயிருந்தது. இன்று மகாராணியார் வேறு ஒரு நாட்டின் தலைவி—

(8-ம் பக்கம் பார்க்க)

# மதம் மாறுவதால் சாதி ஒழியாது!

தமிழ் மக்கள் மத்தியில் நிலவிவரும் சாதி — தீண்டாமையை ஒழிப்பதற்கு மதமாற்றம் ஒரு வழி என்ற தவறான பிரசாரம் நெடுநாட்களாக இருந்து வருகின்றது. எந்த வகையான மதமாற்றமும் இதுவரை சாதி தீண்டாமையை ஒழித்ததாகத் தெரியவில்லை. முன்பு கிறிஸ்தவ மதத்திற்கு சிலர் மதம் மாறினார்கள். அவ்வாறு மாறியவர்கள் கல்வியில் வேலை வாய்ப்பில் மிகக் குறைந்தளவான சிறு சலுகைகளைப் பெற்றனரே தவிர சாதிதீண்டாமையின் கோரப் பிடியிலிருந்து தப்ப முடியவில்லை. ஏனெனில் மிக உயர் சாதி வெறி பாராட்டிய பல குடும்பங்களும் சலுகைகளுக்காகக் கிறிஸ்தவ மதத்தில் மாறிக் கொண்டபோது தங்களது சாதி அகம்பாவத்தை பாவ மன்னிப்புச் செய்துகொள்ளவில்லை. இன்றும் வட பகுதியிலுள்ள பல கிறிஸ்தவ கோவில்களில் அதே சமயத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட மக்கள் சாதியின் பெயரால் புறக்கணிக்கப்படுகிறார்கள், சில குறிப்பான இடங்களில் தனியான கிறிஸ்தவக் கோவில்கள் கட்டிப் புதுமையான 'சமத்துவத்தை' தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அளித்துள்ளனர். அவ்வாறான மதப்பின்னணியோடு இணைந்தவர்கள். ''அறவழிப் போராட்டம்'' என்ற புதுப் பெயரில் சாதிக்கும் தீண்டாமைக்கும் எதிராகக் குரல் கொடுப்பது சகல மக்களையும் சந்தேகிக்க வைத்துள்ளது. இதன்பின்னால் என்னென்ன இருக்குமோ என மக்கள் அஞ்சவேண்டியுள்ளது.

அடுத்த விடயம் தான் பௌத்த மதமாற்றம் என்ற பிரச்சினையாகும். ஏற்கனவே வடபகுதியில் இப் பௌத்த மதமாற்றத்தால் சாதி தீண்டாமையில் எதுவும் நடந்துவிடவில்லை. சிலருக்கு வேலை வாய்ப்பு சலுகை என்றவகையில் கிடைத்ததே அன்றி உரிமைகள், சமத்துவம் என்பதற்கும் பௌத்தமத மாற்றத்திற்கும் எவ்வித தொடர்பும் இருக்கவில்லை. தாழ்த்தப்பட்ட மக்கள் தமது உரிமைகள் பலவற்றையும் சமத்துவத்தையும் பெற்றுக்கொண்

(8-ம் பக்கம் பார்க்க)

## யாழ்-மாவட்ட சபை உறுப்பினர்கள்

# சொத்து விபரம் - வெளியிடுவார்களா?

மாவட்ட அபிவிருத்திச்சபை உறுப்பினர்கள் அனைவரும் தத்தமது சொத்து விபரங்களை வெளியிடவேண்டும். இது மக்களின் நியாயமான கோரிக்கையாகும். இதன் அடிப்படையில் சில மாவட்ட சபைகளின் உறுப்பினர்கள் அதற்கான பிரேரணைகளையும் கொண்டுவர உள்ளனர் எனவும் அறியப்படுகிறது.

மக்கள் இவ்வாறு ஒரு நியாயமான கோரிக்கையை முன் வைப்பதற்கு காரணம் இருக்கின்றது. கடந்த நான்கு ஆண்டுகளில் அபிவிருத்தி என்ற பெயரில் நடைபெற்ற விடயங்களை மக்கள் அறியாமல் இல்லை. ''அபிவிருத்தி'' ''அபிவிருத்தி'' என்று கூறிக்கொண்டு அந்த அபிவிருத்திக்கு பொறுப்பானவர்களும், அவர்களுக்கு வேண்டியவர்களும் பெரும் அபிவிருத்தியை அடைந்துள்ளனர். ஆனால் அபிவிருத்தியானது சுத்தசூனியமாகவே உள்ளது. பாரிய அபிவிருத்தித் திட்டங்களில் இப்படியான தில்லுமுல்லுகள் வாரிச்சுருட்டல்கள் நடைபெற்றபோது மா. அபிவிருத்திகளில் இது நடைபெறமாட்டாது என்பதற்கு என்ன உத்தரவாதம் இருக்கிறது. எனவேதான் மக்கள் இந்த உத்தரவாதத்தை மாவட்ட சபை உறுப்பினர்களிடம் இருந்து எதிர்பார்க்கின்றனர். அதன் முதல் அம்சமே அங்கத்தவர்கள் முதலில் தமது சொத்து விபரங்களை வெளியிடவேண்டும் என்பதாகும்.

குறிப்பாக யாழ்.மாவட்ட அபிவிருத்திசபை உறுப்பினர்கள் நாடுமுழுவதற்கும் முன் மாதிரியாக நடந்து சொத்து விபரங்களை வெளியிடவேண்டும்; அதற்கு அவர்களிடம் விசேட காரணங்களுமுண்டு. அவர்கள் பதவியைக் காட்டிலும் தமிழ்ஈழ இலட்சியவாதிகளென்று கூறி பதவிக்கு வந்தவர்கள். மாவட்ட அபிவிருத்திதான் ''உயிர் மூச்சு'' என்று கூறி வருபவர்கள். அடுத்த காரணம் அவர்கள் அனைவரும் ஏற்கனவே சொத்துகள் — வசதிகள் உள்ளவர்கள்.

எனவே மாவட்ட அபிவிருத்தியின் பெயரால் தங்களை மேலும் அபிவிருத்தி செய்துகொள்ளவில்லை என்பதை மக்கள் முன் உத்தரவாதம் செய்வதற்கு அவர்கள் தமது சொத்து விபரங்களை வெளியிட வேண்டும். இதை யாழ்.மாவட்ட சபை உறுப்பினர்கள் செய்வார்களா?

# கருத்தும் கண்ணோட்டமும்

ஜனமகன்

# மாவட்ட சபைகளின் வண்டவாளம் தெரிகிறது!

# கூட்டணியின் கபட நாடகம் புரிகிறது!!

மாவட்ட அபிவிருத்தி சபைகள் வருவதை முன்னிட்டு தமிழர் விடுதலைக் கூட்டணியினர் வானளாவப் பேசினர். தாம் மேடைகளில் முழங்கிவந்த 'ஈழத்தமிழகம்' வந்ததற்குச் சமம் என்றும், சமஷ்டி அமைப்பை விட மாவட்ட அபிவிருத்தி சபை அமைப்பு சிறந்தது என்றும் பிரசாரம் செய்தனர். இவற்றையெல்லாம் வகுத்துக் கொடுத்த உலக சஞ்சாரி ஜெயரத்தினம் வில்சனைப் பெரிதும் பாராட்டினர். கூடவே நீலன் திருச்செல்வத்தின் பெருமையையும் பலவாறு புகழ்ந்தனர். அதிகாரம் பரவலாக்கப்படுகிற என்றும் சுதந்திரத்திற்கு அடிப்படையே அபிவிருத்திதான் என்றும் பிதற்றினர். வடபகுதியைப் பொறுத்த வரையில் யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திச் சபை சிறு பாராளுமன்றமாகவிளங்கும் என்றும் கூறினர். மாவட்ட சபை நடவடிக்கைகளை, பாராளுமன்ற ஹன்சார்ட்போல வெளியிடவும், பாராளுமன்றக் கட்டிடத்தைப் போல யாழ்ப்பாண அபிவிருத்திச் செயலகத்துக்குப் புதியதொரு — மாபெரும் — கட்டிடம் நிறுவ வேண்டும் என்றும் பேசப்பட்டது. இவ்வாறெல்லாம் தாம் பகற்கனவுகள் கண்டது மட்டுமல்லாமல் பிறரையும் பிரமைகளில் ஆட்டிப்படைத்தனர் கூட்டணிப் பிரமுகர்கள்.

ஒரு சில வாரங்கள்கூட கழியவில்லை. அதற்குள் மாவட்ட அபிவிருத்திச் சபைகளின் வண்டவாளம் வெளிப்பட்டுவிட்டது. பொதுமக்களுக்கும் பெரும்பாலான அரசியல் அவதானிகளுக்கும் விடயம் முன்னரே தெரிந்ததுதான். ஆனால் கூட்டணித் தலைவர்கள் வழக்கம்போலவே ஏமாற்று நாடகத்தை நடாத்திக்கொண்டிருந்தனர். இப்பொழுது மாவட்ட அபிவிருத்திச்சபை உறுப்பினர்களே கசப்பான உண்மையை ஒப்புக்கொள்ளத் தொடங்கியிருக்கின்றனர். எத்தனை நாட்களுக்குத்தான் ஏமாற்றிப்பிழைக்க முடியும்? மாவட்ட சபை உறுப்பினரான எம்.பி. ஒருவர் எரிச்சலுடன் கூறியதுபோல ' தீர்மானங்கள் அழகாக நிறைவேற்றலாம். பணம் வேண்டுமே?'' ஆரவாரப்பட்ட அபிவிருத்திச்சபைகள் வந்துவிட்டன. அவற்றைக் கொண்டு நடத்த நிதி இல்லை. ஆற்றல் உள்ள நிர்வாகிகளும் இல்லைத்தான். இதுமுன்னரே தெரிந்திருக்க வேண்டியது.

மாவட்ட அமைச்சர் ஒரு புறம்; மாவட்ட அபிவிருத்திச் சபை மற்றொரு புறம்; இவையிரண்டிற்கும் உள்ள முரண்பாடுகளும் மோதல்களும் இன்னும் தீர்க்கப்படாமலே இருக்கின்றன. அதற்கும் மேலாக நிதியில்லாப் பிரச்சினை பிரதான பிரச்சினையாக எழுந்துள்ளதாம். கூட்டணித் தலைவர்கள் அபிவிருத்திச் சபைகளுக்காக ஒற்றைக்காலில் நிற்கும்போதே நாட்டின் நிதி நிலைமையை நன்கு தெரிந்திருப்பார்கள். ஆயினும் தமது அரசியல் நடைமுறைகளுக் கேற்ப சுலோகங்களுக்கே முக்கியத்துவம் அளித்து, பொருளாதார அம்சங்களைக் கவனிக்காதுவிட்டமையால் இந்த அவல நிலைமைக்கு ஆளாகியுள்ளனர். அந்தந்த மாவட்டம் தனக்குரிய நிதியைத் திரட்டிக்கொள்ள வேண்டும் என்பதே ஜனாதிபதியின் கருத்தாம். ''சுதந்திர'' பொருளாதாரத்தில் எப்படி எத்தகைய மானியங்களும்கிடையாதோ அதைப்போலவே மாவட்ட சபைகளுக்கும் அரசமானியங்கள் இல்லையாம்: ஒவ்வொரு சபையும் தனது சுய பலத்திலேயே தங்கியிருக்க வேண்டும் என்பது வாதம். புதிய வரிகளை உள்ளூர் மட்டத்தில் விதித்துக் கொள்ள முடியுமாம். இது கூட்டணியினருக்குத் தலையிடியைக் கொடுக்கலாம். இப்பொழுதே விலைவாசி உயர்வும் பணவீக்கமும் இலட்சக் கணக்கானோரின் வாழ்க்கையை துன்ப துயரங்களில் அமிழ்த்திக் கொண்டிருக்கின்றன. இதற்குமேல் வரிச் சுமைகளைப்போட்டால் மக்கள் தாங்கமாட்டார்கள் என்பதை கூட்டணித் தலைமை அறியாதிருக்க முடியாது. பதவி ஆசை ஒருபுறம். பண நெருக்கடி மறுபுறம். எப்படி இந்தப் பொறியிலிருந்து தப்பித்துக் கொள்வார்களோ தெரியாது. ஆனால் வீராவேச கோஷங்களால் தொடர்ந்தும் மக்களை ஏமாற்ற இயலாது என்பதை அவர்கள் உணரவேண்டும்.

பொதுவாக விஷயமறிந்த வட்டாரங்களில் சிறப்பாக வெளிநாடுகளைச் சேர்ந்த தூதரக வட்டாரங்களில் பேசப்படுவது யாதெனில், அமிர்தலிங்கம் கும்பல் 'கபட' நாடகத்தை ஆடினாலும் பொதுவில் போட்டு உடைத்து விட்டார்கள் என்பதே. ஜனாதிபதி விரித்த வலையில் வளமாக மாட்டிக் கொண்டார்கள் என்பதை அவர்களால் இனியும் மறுக்கவோ மறைக்கவோமுடியாது.

ஆனால் ஒரு முக்கிய விஷயத்தில் கூட்டணியும் யூ. என்.பி.யும் இன்று கூட்டுச் சேர்ந்துள்ளன. வர்க்க அடிப்படையில் இருகட்சிகளுமே தனியார்துறையை முழுமூச்சாக ஆதரிப்பன. ஜனாதிபதி பதவியிலிருந்து போகுமுன் தனியார் துறையை எவ்வளவு வலுப்படுத்த முடியுமோ அவ்வளவுக்கு ஊக்கி வருகிறார் ஜே.ஆர்.சபதம்செய்தவர் போல யாவற்றையும் தனியார் துறைகட்கே தாரை வார்த்துக் கொடுத்து வருகிறார். இந்த அடிப்படையிலேயே தமிழ் முதலாளிகள்,

## உலகத் தமிழ் முதலாளிகளுக்கு அழைப்பு!

## வட-கிழக்கில் பணமுதலைகளுக்கு வாய்ப்பு!!

குறிப்பாக கொழும்பு பெரு முதலைகள் — அமிர்தலிங்கம் கும்பலுக்கு புதிய புதிய கட்டளைகளைப் பிறப்பித்துக் கொண்டிருக்கின்றன. அரசாங்கத்துடன் இணைந்து அகப்பட்டதை அவசரம் அவசரமாகச் சுருட்டிக் கொள்ள வேண்டும் என்பதே முதலாளிகளின் நோக்கமாகும். சமது பஸ்கள் இலாபம் ஈட்டவேண்டும் என்பதற்காக யாழ்ப்பாணம் — கொழும்பு புகையிரதங்களையே குறைப்பிக்கும் அளவிற்கு தமிழ் முதலாளிகள் அரசு இயந்திரத்துடன் சேர்ந்து செயலாற்றுகின்றனர். அதற்கு ஏற்றமாதிரி அரசியல் பொருளாதரர சுலோகங்களை அமைத்துக் கொள்ளுகிறார்கள் கூட்டணித் தலைவர்கள்.

யாழ்ப்பாணம், வவுனியா மன்னார், முல்லைத்தீவு பகுதிகளில் தமிழ் முதலாளிகளும், பணமுதலைகளும் முதலீடு செய்வதைத் தாம் ஊக்கப் படுத்தப் போவதாக அரசு வட்டாரங்கள் கூறுகின்றனவாம். தெற்கில் இருப்பதைபோல சில வசதிகள் வடக்கில் இல்லாதுபோயினும், வவுனியா, மன்னார் மாவட்டங்களில் தமிழ் முதலாளிகளுக்கு சில சலுகைகள் வழங்குமாறு மாவட்ட சபைகளுக்கு அந்தரங்க ஆலோசனைகள் வழங்கப்பபட்டிருக்கின்றன. அதேவேளையில் இன்னொரு பகுதியிலிருந்தும் உதவி எதிர்பார்க்கப் படுகிறதாம். வெளிநாடுகளில் குறிப்பாக ஆபிரிக்கா அமெரிக்கா ஆசிய பிராந்தியங்களில் வாழும் செல்வந்தராயுள்ள தமிழர்கள் பலரைத் தமிழ்ப்பகுதிகளில் முதலீடு செய்யுமாறு கூட்டணித் தலைமை வேண்டுகோள் விடுத்துள்ளதாம். அமிர்தலிங்கம், நவரத்தினம், இராசலிங்கம், சிவசிதம்பரம் முதலியோர் அண்மைக்காலங்களில் மேற்கொண்ட உலகச் சுற்றுப் பயணங்களில் இந்த அழைப்பும் வேண்டுகோளும் விடுக்கப்பட்டதாக செய்திகள் கிடைக்கின்றன. சில காலத்திற்குமுன் அமிர்தலிங்கம் அமெரிக்காவிற்கு மேற்கொண்ட உல்லாசப் பிரயாணத்தின்போது உலக வங்கி உத்தியோகத்தர்களைச் சந்தித்து வடபகுதிக்கு கடனுதவி பெறுவதன் சாத்தியக் கூறுகள்பற்றிப் பேசியதாகச் சில செய்திகள் வந்ததும், அதனை அரசாங்கம்கண்டித்ததும் ஒருநாடகமாக நடிக்கப் பட்டது பலருக்கு நினைவிருக்கும். சின்னஞ்சிறு விடயத்தை பொதுசன தொடர்புச் சாதனங்கள் பெரிதுபடுத்திச் செய்தி திரித்தன என்பதே உண்மை. ஆனால் அமெரிக்க தலைநகரான வாஷிங்டனில் உள்ள தமிழர்கள் சிலரிடமிருந்து கிடைக்கும் செய்திகளின்படி சில உலக வங்கி உத்தியோகத்தர்களை அமிர்தலிங்கம் சந்தித்தது உண்மையே என்றும் ஆனால் அமிர் சந்தித்துக் கேட்டது, வடபகுதித் தமிழ் முதலாளிகளுக்குக் கடனுதவியே என்றும் இப்பொழுது தெரியவந்துள்ளது. உள்ளூரிலும் வெளிநாடுகளிலும் வாழும் தமிழ்ப் பண முதலைகளைச் சார்ந்து, காரியத்தை நிறைவேற்றலாம் என்று கூட்டணித் தலைமை கனவுகாண்கிறது. ஆனால் காலங்கடந்து விட்டதை அவர்கள் கணக்கில் எடுக்கத் தவறிவிடுகின்றனர். முன்னெப்பொழுதும் இல்லாதவாறு இன்றுயூ.என்.பி. அரசாங்கம் நிதி நெருக்கடியில் சிக்கியுள்ளது. அடுத்த வருடம் செலவினங்கள் நாலாயிரம்கோடி ரூபாய். வருவாயோ இரண்டாயிரம் கோடிதான். பற்றாக் குறையை நிரப்பமுடியாமல் திணறுகிறது அரசாங்கம். ஆனால் ஜயவர்த்தனபுரம் என்ற புதிய நகரத்தைக் கட்டி முடிப்பதற்கு மட்டும் 200 கோடி ரூபாய்களுக்கு மேல் செலவிடப்படுகிறது. யப்பானிய கொந்தராத்துக்காரருக்கு அத்தொகையில் கணிசமான பகுதி போய்ச்சேருகிறது.

(7-ம் பக்கம் பார்க்க)

---

**மா O சபைச் சலுகைகள்**

**மாத அலவன்ஸ்சுகள்**

**தலைவருக்கு**

1500 + 500 மொத்தம் 2000 ரூபா

தனிக்கார், தனிச்சாரதி, பெற்றோல், குளிரூட்டப்பட்ட காரியாலயம் வேறும்பல.

**நிறைவேற்று குழு உறுப்பினருக்கு**

1200 ரூபாவும் பிறவசதிகள் — சலுகைகள்

**உறுப்பினருக்கு**

1000 ரூபாவும் பிறவசதிகள் சலுகைகள்.

குறிப்பு: இவ் அலவன்சுகளும் ஏனைய சலுகைகள்-வசதிகள் எதிர்காலத்தில் பல்கிப் பெருகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

---

**சோமரும் — சாதரும்**

சோமர்: என்ன அண்ணை! இவர் அமிர்தலிங்கத்தார் மனிசியோடை தாய்வானுக்குப் போட்டார் எண்டு பேப்பரிலை இருக்குது. என்ன விஷயம்; அங்கேயும் தமிழர் இருக்கினமே!

சாதர்; அங்கே ஆர்காணும் தமிழர் இருக்கிறது. விஷயம் என்னெண்டால் அமெரிக்காகாறன் தாய்வானை சீனாவிலை இருந்து கனகாலமாப் பிரிச்சு வைச்சிருக்கிறான். இப்ப சீனா தாய்வானை இணைச்சு ஒருநாடாக்க யோசிக்குது.

சோமர்: அதுக்கேன் அமிர்தலிங்கத்தார் போறார்,

சாதர்: விஷயம் விளங்கேலையே! தாய்வான் கடைசி வரை சீனாவோடு இணையக் கூடாது; பிரிஞ்சு இருக்கிறதுதான் சரி எண்டு நியாயங்கள் சொல்லிக்கொடுக்கத்தான் அமிர்தலிங்கத்தார் மனிசி போயிருக்கிறார் எண்டு கதைக்கினம்.

சோமர்: ஓகோ! இங்கை பேசிச் சரிவராததை அங்கையாவது பேசி உசார் கொடுப்பம் எண்டு போயிருக்கிறார் போலை கிடக்குது பாவம்.

# அடைய முடியாத கோரிக்கைகளும் அடிபணிந்த நடவடிக்கைகளும்

— தமிழ்நேசன் —

தமிழ் மக்கள் இந்த நாட்டில் மாறிமாறி வந்த அரசாங்கங்களின் கீழ் எதிர்நோக்கிய பிரச்சினைகள் அவர்களை பெரும் வேதனைக்கும் விரக்திக்கும் ஆளாக்கி விட்டது. வேலைவாய்ப்பு, கல்வி குடியேற்றம், இனக்கலவரங்கள், உயிர் - உடைமைகளை இழத்தல், அரசு இயந்திரத்தின் நேரடியான இனவாத அடக்கு முறை போன்றவை தமிழ்மக்களின் வாழ்வையும், சிந்தனையையும் பாதித்துவந்துள்ளன.

நாட்டு மக்கள் அனைவரினதும், முழுத்தேசத்தினதும் சுபீட்சமான வாழ்வை உத்தரவாதம் செய்யும் ஒரு சரியான தேசிய பொருளாதார அடிப்படையை உருவாக்குவதை முதலாளித்துவப் பாராளுமன்ற அமைப்புமுறை உதாசீனம் செய்துவந்தது. அந்த அமைப்பு முறையின் ஆளும் வர்க்கமாக மாறி மாறி அதிகாரபீடத்துக்கு வந்தவர்களால் நாட்டு மக்களின் எந்தப் பிரச்சனைக்கும் தீர்வுகாண முடியவில்லை. அதற்குப் பதிலாக அவர்கள் இனவாதத்தை ஒரு கருவியாகப் பாவித்து சிங்கள — தமிழ் தேசிய இனங்களிடையே துவேசத்தை வளர்த்து அவர்களது கவனத்தைத் திசைதிருப்பி வந்தனர். ஐக்கியப்பட்டு தமது பொது எதிரியை இனங்கண்டு அதைத் தோற்கடித்து முன்னேற வேண்டிய உழைக்கும் சாதாரண சிங்கள — தமிழ்மக்கள் அதே பொது எதிரியால் கிளப்பிவிடப்பட்ட இனவாத பிரச்சாரத்தால் வழிதடுமாறவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாகிவிட்டனர்.

இரண்டு தேசிய இனங்களிடையேயும் துவேஷத்தை விதைத்து அதன்மூலம் அரசியல் இலாபம் பெற்றதில் சிங்கள ஆளும் வர்க்கத்திற்கு பெரும்பங்கு இருந்தபோதிலும் தமிழ் சொத்துடைய வர்க்கமும் அவர்களது அரசியல் பிரதிநிதிகளான தமிழர் கட்சிகளுக்கு இலாபமோ, பங்கோ இல்லை என மறுத்துவிடமுடியாது.

சிங்கள ஆளும் வர்க்க சக்திகளால் கிளப்பிவிடப்பட்ட இனவாதத்திற்கும், வகுப்புவாத வெறிக்கும் எதிராக எதிர்நீச்சல் அடித்துத் தேசியரீதியில் சிங்கள உழைக்கும் மக்களோடு ஐக்கியப்பட்டு முன்னேறுவதற்குப் பதிலாக தமிழ்மக்களை இனவாதரீதியில் அழைத்துச் சென்று தமது அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்குத் தமிழர் கட்சிகளின் தலைவர்கள் தமிழ் மக்களைத் தமது பலிக்கடாக்களாக ஆக்கிக் கொண்டனர். தமிழ்மக்களை தேசிய முற்போக்கு ஓட்டத்திலிருந்து பிரித்து எடுப்பதில் தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் வெற்றி பெற்ற அதே வேளை தங்களை சிங்கள ஆளும் வர்க்கத்தோடு இணைத்து தமக்கும் தமது சொத்துடைய தமிழ் வர்க்கத்திற்கும் இலாபங்களைத் தேடி வருகிறுக்கின்றனர்.

தமிழ் மக்களை எந்தளவு உச்சத்திற்கு உணர்ச்சிவசப்படுத்த முடியுமோ அந்தளவு உச்சத்திற்கு கோரிக்கைகளை முன்வைத்து உணர்ச்சிவசப்படுத்தி 'வாக்கு'களை பெற்றதில் தமிழ்த் தலைவர்களுக்கு நிகர் அவர்களேதான். இரட்டை வேடம் கொண்ட தமிழ் தலைவர்கள் உச்சக் குரலில் 'தமிழ் மக்களின் விடிவுக்கு' கோரிக்கைகளை காலத்திற்கு காலம் முன்வைத்த வேளை அக்கோரிக்கைகளைத் தங்களால் வென்றெடுக்க முடியுமா? அல்லது அடைந்துவிட முடியுமா? என்பதைப் பற்றி ஒரு கணமேனும் சிந்திக்க வேண்டிய அவசியம் அவர்களுக்கு என்றும் வந்ததில்லை. ஏனெனில் அவர்கள் முன்வைத்த எல்லாக் கோரிக்கைகளும் தமிழ்மக்களிடம் வாக்குகள்பெற்று பாராளுமன்றம் செல்வதற்கே அன்றித் தமிழ்மக்களின் சுபீட்சமான வாழ்வுக்கு அல்ல என்பது அவர்களைப் பொறுத்தவரை மிகத் தெளிவானதேயாகும்.

அன்று ஜி. ஜி. பொன்னம்பலம் 'ஐம்பதுக்குஐம்பது' கோரிக்கையை முன் வைத்து தமிழ்மக்கள்முன் வாக்குக் கேட்டபோது அது அடையக்கூடிய ஒரு கோரிக்கையா என்பதுபற்றி சிந்தித்தது கிடையாது. அதன்பின் எஸ். ஜே. வி. செல்வநாயகம் சமஷ்டி கேட்டபோதும் அதை வென்றெடுக்க முடியுமா? என்பதுபற்றிச் சிந்திக்கவில்லை. அதேபோல் சிங்களச் சிறி வேண்டாம் என அமிர்தலிங்கம் சிறி எதிர்ப்புக் கோரிக்கை கிளப்பியபோதும் அது நடைமுறை சாத்தியமா என்பதுபற்றிச் சிந்தித்தது கிடையாது. இவ்வளவிற்குப் பின்பும் வட்டுக்கோட்டை மகாநாட்டில் 'தமிழ் ஈழ' கோரிக்கையைப் பிரகடனப்படுத்திய போது கூட இது சாத்தியப்படக்கூடியதொன்று என்பது பற்றி அவர்கள் யோசித்தது கிடையாது. அண்மையில் இனக்கலவரம் நடைபெற்ற சூட்டோடு தமிழ் மக்கள் முன் முகம் கொடுப்பதற்கு, "சர்வதேச விசாரணைக்குழு" கோரிக்கை உட்பட ஐந்து கோரிக்கைகளை முன்வைத்தனர், ஐந்தில் ஒன்றுகூட நிறைவு செய்யப்படாவிட்டால் பாராளுமன்றப்படி மிதிக்க மாட்டோம் என்று சபதம் இட்டனர். இன்று என்ன நடைபெறுகின்றது.

தமிழ்த் தலைவர்கள் எப்பொழுதும் அடைய முடியாத கோரிக்கைகளை முன்வைத்து தோல்விக்குமேல் தோல்வியைத் தேடிக்கொண்டும் வந்துள்ளனர். தோல்வி மட்டும் வந்தால் பரவாயில்லை. ஒரு இனத்தின் சுயமரியாதையையே விலைபேசி விற்கும் தரகர்களாகத் தம்மை இனம்காட்டியும் வந்துள்ளனர். தமிழ் மக்களின் சுயமரியாதை என்பதோ அன்றி அடிபணிந்து செல்வது என்பதோ தமிழ்த் தலைவர்களின் வரிசையில் வரலாற்றில் மிகமிக அற்பமான விடயம். ஏனெனில் தமது

(6-ம் பக்கம் பார்க்க)

## வாசகர் கடிதங்கள்

★

தமிழர் கூட்டணியின் தகடுதத்தங்களை சரியான முறையில் அம்பலமாக்கிவரும் 'கருத்தும் கண்ணோட்டமும்' பகுதியை எழுதும் ஜனமகனுக்கு எனது பாராட்டுக்கள் ஏமாற்றுத் தலைமையின் அரசியல் மோசடிகளை சாதாரண தமிழ் மக்கள் உணரும்படி செய்வது அவசியமாகும். செம்பதாகை அப்பணியைத் தொடரவேண்டும் என விரும்புகின்றன்.

ம. தனகோபாலன்
பம்பலப்பிட்டி.

தோட்டத் தொழிலாளர்களின் வறுமைக்கு குடிப்பழக்கம்தான் பிரதான காரணம் என்று நீண்டகாலம்பிரசாரம் இருந்து வருகிறது. நானும் அதில் உண்மை உண்டு என நம்பி வந்தேன். செம்பதாகையின் ஆவணி இதழில் வெளிவந்த திரு. கரவிட்ட அவர்களின் மலையகப் பேச்சு ஒன்றில் சரியான விளக்கத்தைப் பெற முடிந்தது. இது போன்ற நல்ல விளக்கங்களை செம்பதாகை தொடர்ந்து வெளியிடும் என்று நம்புகின்றேன்.

பெருமாள் நாதன்
அப்புத்தளை.

எழுதுமட்டுவாள் சாதிவெறியர்களின் வெறியாட்டங்களையும், அதனால் பாதிப்படைந்த மக்களின் நிலைமைகளையும் செம்பதாகை நல்லதோர் விதத்தில் செய்திவெளியிட்டிருந்தது. நன்றி.

அ. பராராஜசிங்கம்
கொடிகாமம்.

செம்பதாகை வெகுஜனத் தன்மை வாய்ந்த செய்திகளை நல்ல முறையில் வெளியிட்டு வருகின்றது. அதே வேளை மாக்சிசம்-லெனினிசம் மாசேதுங் சிந்தனையை அடிப்படையாகக் கொண்ட தத்துவக் கட்டுரைகளையும் வெளியிட்டால் என்ன?

க. பாலசஸ்வரன்
அளவெட்டி.

மேற்கு பேர்லினில் இருந்து

## ஒரு கடிதம்

அன்புள்ள சிவாவுக்கு!

எனது முதல் கடிதம்கிடைத்திருக்கும் என நம்புகின்றேன். நீண்ட இடைவெளிக்குப்பின் இக்கடிதத்தை உனக்கு எழுதுகின்றேன். உனக்கு இக்கடிதத்தை எழுதுவதையிட்டு நான் எந்தத்தாழ்வு மனப்பான்மையும் கொள்ளவில்லை. ஏனெனில் நான் எழுதும் ஒவ்வொரு விடயத்தையும் நீ முன்கூட்டியே என்னோடு விவாதித்திருந்தாய். அப்பொழுது நீ கூறியவற்றை அரைகுறைக் காதால்தான் நான்கேட்டுக் கொண்டிருந்தேன். ஏன் என்றால் நான் கட்டிக் கொண்டிருந்த ஆயிரம் அடுக்கு மனக் கோட்டைகளின் மத்தியில் உனது ஆலோசனைகள் வெறும் தத்துவங்கள் என்றுதான் எண்ணியிருந்தேன். உனது தத்துவங்களும் இலட்சியங்களும் நல்லவையாக எனக்கு தென்பட்டபோதிலும் அவற்றை நமது நாட்டில் அடைய முடியாதுஎன்ற நம்பிக்கைதான் எனக்கிருந்தது. அதனால் என்னைசூழ்ந்திருந்த பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணலாம் என்றஎனது நம்பிக்கையை நடைமுறைப்படுத்த நான் ஜெர்மனிக்கு வந்தேன்.

நான் இங்கு வந்து ஆறுமாதங்களாகிவிட்டது. அகதிகள் என்ற அடையாளத்துடன் ஆனால் மனசாட்சியின்படி அதற்கு எவ்வகையிலும் பொருத்தமற்ற நானும் என்னைப்போன்ற பலரும், தண்டச்சோறு உண்ணும் தன்மானமிழந்த மனிதர்களாகவே இங்கு நடமாடுகின்றோம். வியட்னும் கம்பூச்சியா, எரித்திரியா, ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் இருந்து உண்மையான அகதிகள் இங்கு வந்திருக்கின்றார்கள். அவர்களது நிலையோடு எங்களை ஒப்பிடும்போது உண்மையில் நான் மிகவும் வெட்கப்படுகின்றேன். கடலாலும், கால்நடையாலும் அலைந்தொழிந்து, அகதிகளுக்குள்ள அத்தனை தன்மைகளோடும் வந்துள்ள அவர்களின் முன்னே கோட்டும் சூட்டும் குளிரில் இருந்து தப்புவதற்கு கம்பளியோடும் உல்லாசப் பயணிகள்போல வந்துள்ள நாம் வெட்கப்படுவதைத் தவிர வேறுஎதைத்தான் செய்யமுடியும்.

ஆறு மாதங்களாகியும், அகதிகள் என்ற அடையாளத்துடன் மாதம் 257 மார்க்குகள் பெற்று உயிர்வாழ்கின்றோம்; இதில் மிச்சம்பிடித்துநான் உட்படப் பலர் வீடுகளுக்கும் அனுப்புகின்றனர். இதை சம்பளம் என்று கூறுவதா அன்றி பிச்சைகிடைத்ததில் மீதப் பணம் என்று குறிப்பிடுவதா? என்று தான் புரியவில்லை. இங்கு வேலை பெறுவது என்பது நரிக்கொம்பாகி விட்டது. இங்கு பத்துலட்சம் பேருக்கு வேலை இல்லை. தொழில் செய்பவர்கள் மத்தியில் கூட அமைதியின்மையே காணப்படுகின்றது. ஜெர்மனி மிகவும் வளர்ச்சிபெற்ற பணக்கார நாடு. ஆயினும் சமூகப் பிரச்சனைகளும் அதிருப்தியும் — வெறுப்பும் விரக்தியும் காணப்படுகின்றன. எதிர்ப்பு இயக்கங்கள் ஆங்காங்கே தோன்றிக்கொண்டிருக்கின்றன. ஒரு ஜெர்மன் இளைஞனோடு பேசும்போது 'ஜெர்மனி உட்பட மேற்கு உலகநாடுகளில் ஏதாவதொரு நாட்டில் வேலை இல்லாத் திண்டாட்டம் இல்லை என்று உங்களால் சுட்டிக்காட்ட முடியுமானால் உங்களுக்கு நமது நாட்டில் வேலைகிடைப்பது கஷ்டமாக இருக்காது" என்று கூறினார். அவரது பேச்சுத்தொனியில் இருந்து அவரையும் ஒரு வேலை தேடுபவராகவே கருதமுடிகிறது.

எனது உடல் நலத்திற்கு அதிககுறை ஏதும் இல்லை. ஆனால் எனது உள்ளம் மிகவும் பாதிப்படைந்துள்ளதை, உனக்குக் கூறாது வேறுயாருக்குத்தான் கூற முடியும். எனது மனச்சாட்சியை ஆயிரம் கேள்விக்கணைகள் குறிகாட்டி நிற்கின்றபோது எனது மனசாட்சி மௌனமாகி ஊமைக்கண்ணீர் வடிப்பதை தான் உணர்கின்றேன். இந்த ஆயிரம் கேள்விக்குறிகளுள் நீஎன்னை நேரில்கேட்ட பல கேள்விகளும் அர்ச்சுனன் தொடுத்த அம்புகள்போல் நிற்கின்றன. அந்நிய நாடு ஒன்றில் அடிமைகளாக கூனி, குறுகி, ஆண்மை அற்ற கோழைகளாக வாழ நேரிட்ட துர்ப்பாக்கிய நிலையை எண்ணும்போது மனக்கோளாறு ஏற்பட்டுவிட்டால் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை.

நவீன கூலி அடிமைதனத்திற்கு எதிராக நீ அடிக்கடி கூறும் எந்தக் கால்மாக்ஸ் போர்க்கொடி உயர்த்தினாரோ அந்த மார்க்ஸ் பிறந்த ஜெர்மன் மண்ணில் நானும் என்னைப் போன்றவர்களும் அகதிகள் என்ற போர்வையில் நவீன அடிமைகளாக இருக்கின்றோம் என்பதை நினைக்கும்போது ஓ வென்று கதறி அழவேண்டும்போல் தோன்றுகிறது.

அன்பு நண்பா! உனக்கு வெளிநாடு செல்ல வாய்ப்பு இருந்தும் அதை நீ உதறித்தள்ளி ஒரு உறுதியான முடிவோடு சொந்த மண்ணில் தலைநிமிர்ந்து தன்மானத்தோடு வாழ்கிறாய். "சமூக நிர்ப்பந்தங்களுக்காக வெளிநாடு செல்வதுதான் மார்க்கம் என்றால். அப்படி வெளிநாடு செல்லும் நம்மவர்கள் அச்சமூக நிர்ப்பந்தங்களை மேலும் நிரந்தரமாக்கவே உதவிசெய்கிறார்கள்' என்று நீ கூறிய கூற்றின் உண்மையை நான் உணர்கின்றேன்: அப்படியான சமூக நிர்ப்பந்தங்களை முறியடித்து அவற்றை மாற்றி அமைப்பதற்கு உன்னைப்போன்ற உள்ளம் படைத்தவர்கள்தான் எமது நாட்டிற்குத் தேவைப்படுகிறார்கள் என்பதையும் உணர்கின்றேன். நான் என்ன செய்வது உவ்விடமும் வரமுடியாமல்; இங்கும் இருக்க முடியாமல் இடைநடுவே இருக்கும் அவலநிலைக்கு ஆளாகியுள்ளேன். உனது கடிதத்தை எதிர்பார்க்கிறேன்.

நன்றி. வணக்கம்

அன்பின் நண்பன் கருணை

# நாட்டுநிலையை உணர்ந்து இலக்கியம் படைத்தவர்

## லூசுன்

**நவசீன இலக்கியத்தின் முன்னோடியான லூசுன் அவர்களின் நூற்றாண்டுதினத்தை முன்னிட்டு இக் கட்டுரை வெளியிடப்படுகிறது. (1881 — 1981)**

நவீன தமிழ் இலக்கியத்தின் முன்னோடியான சுப்பிரமணிய பாரதியின் நூற்றாண்டு நினைவைக் கொண்டாட தமிழுலகம் ஆயத்தமாகிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் நவசீன இலக்கியத்தின் பிதாமகனை லூசுன் (1881—1936) 'நூற்றாண்டு நினைவை நாம் கொண்டாடுதல் சாலப் பொருத்தமாகும். ஆசிய மொழிகள் சிலவற்றில் நவயுகத்தைப் புகுத்திய கலை இலக்கிய முன்னோடிகள் ஏறத்தாழ ஒரு நூற்றாண்டிற்கு முன் பிறந்தமை வரலாற்று நிகழ்வுகளுக்கும் பொருத்தமுடையது. தமிழிலக்கியத்தின் புதுநெறிகள் சிலவற்றுக்கு வழிவகுத்த வ.வே.சு. ஐயர், டி.கே.சிதம்பரநாத முதலியார், நவீன மலையாள இலக்கியமுன்னோடிகளில் ஒருவரான குமரன் ஆசான், இந்தி முற்போக்கு இலக்கிய வழிகாட்டியும் சிறந்த சிறுகதை ஆசிரியருமான பிரேம்சந்த், வங்காள நாவலாசிரியர் சரத்சந்திரர் முதலியோர் ஆயிரத்து எண்ணூற்று எண்பதிற்கு முன்பின் பிறந்தவர்களே. இது ஒரு தற்செயல் நிகழ்வு அல்ல. அந்நியரின் ஆதிக்கத்திலும், செல்வாக்கிலும் பாரதனைப் பட்டுக் கிடந்த ஆசியாக் கண்டத்தின் பலபகுதிகளில் நிலவிய மொழிகளில் மேற்கூறிய இலக்கிய கர்த்தாக்கள் எழுதினர். அந்நியராட்சிக்கும் கலாசார ஊடுருவலுக்கும் எதிராகக் குரல் எழுப்பி விடுதலை வேட்கையைத்தூண்டிவிட்ட இவர்கள் தேசவிடுதலையுடன் மொழி இலக்கிய விடுதலையையும் இலட்சியமாகக் கொண்டிருந்தனர். அந்நிய கலாசாரத்தினால் பெருமளவிற்குப் பாதிக்கப்பட்ட இவர்கள் அதன் சிற்சில அம்சங்களையும் கூறுகளையும் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டனர். புது நெறி காண்பதற்கு அயல்மொழி இலக்கியத் தொடர்புகள் அநுசரணையாயமைந்தன. ஆனால் அயல்மொழிச் செல்வாக்குகளுக்கு அடிமைப்பட்டுவிடாமல் அவற்றையே தமது தேவைக்கேற்ப ஆக்கபூர்வமாகப் பயன்படுத்தியமையே இத்தகையோரின் தனிச்சிறப்பியல்பு எனலாம்.

சீன நவீன இலக்கியத்தின் சிற்பியான லூசுன்பற்றி எண்ணும்பொழுது இந்த வரலாற்றுப் பின்னணி மனங்கொளவேண்டியதொன்றாகும். பாரதி, லூசுன் போன்றோருக்கு அந்நிய ஏகாதிபத்திய — எதிர்ப்புணர்வு வாழ்க்கையின் அடியாகவும் எழுந்தது என்பது நினைவுகூரத்தக்கது.

லூசுன் இளைஞனாக இருந்த காலகட்டத்தில் நவீன உயர்கல்வி பெற விரும்பிய சீனர் யப்பானுக்கு அல்லது மேற்கு நாடுகளுக்குச் செல்வதே ஏற்புடையதாயிருந்தது. தந்தை இறந்தபின்பு தாயிடமிருந்த சொற்ப பணத்தைப்பெற்றுக் கொண்டு சீனநகரமான நாங்கிங் சென்று முதலில் கடற்படைக் கல்லூரியிலும் பின்னர் சுரங்கப் பொறியியல் கல்லூரியிலும் சிறிது காலம் பயின்ற லூசுன் 1902 இல் ரோக்கியோ சென்று யப்பானிய மொழியைக் கற்கத் தொடங்கினார். ஈராண்டுகள் யப்பானிய மொழி பயின்ற பின் சென்தாய் என்னுமிடத்தில் இருக்கும் மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து படிக்க முற்பட்டார். வைத்தியப் படிப்பில் ஈடுபட்டிருந்த பொழுதே எழுத்தாளனாக வர முடிவுசெய்தார். சீன மக்களின் உடற் பிணிகளைப் பார்க்கிலும் உளப் பிணிகளுக்கு வைத்தியம் செய்வதே இன்றியமையாததாய் அவருக்குத் தோன்றியது. "போருக்கு அறைகூவல்" எனும் தலைப்பில் வெளிவந்த கதைத் தொகுதிக்கு எழுதிய முன்னுரையிலே தனது மனமாற்றத்துக்கான காரணத்தை நயம்படக் கூறியிருக்கிறார். அப்பொழுது [1905 ஆம் வருடம்] ரஷ்ய — யப்பானிய யுத்தம் நடந்து கொண்டிருந்தது. வைத்தியக் கல்லூரியிலே பிரசாரத் திரைப்படங்கள் காட்டப்பட்டன. யப்பானிய மாணவருடன் சீன மாணவரும் சென்று கரகோஷம் செய்து போருக்கு ஆதரவு தெரிவிக்கவேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது. ஒரு நாள் படக்காட்சியின்போது நடந்த சம்பவம் லூசுன் சிந்தனையிலும் உணர்விலும் பெரு மாற்றத்தை ஏற்படுத்தியது. அவர் பின்வருமாறு எழுதினார்:-

"படத்தின் ஒரு காட்சியிலே சீனமக்கள் பலர் நிற்பதும், நடுவே ஆஜானுபாகுவான சீனமகன் ஒருவன் கட்டுண்டு நிற்பதும் காட்டப்பட்டது. அவர்கள் அனைவரும் பலசாலிகளாக இருந்தும் அசிரத்தையுடன் காணப்பட்டனர். படத்தின் விவரண விளக்கத்தின்படி கைகள் கட்டப்பட்டு நிற்பவன் ரஷ்யருக்காக உளவு பார்த்தான் என்றும், ஏனையோருக்கு ஓர் எச்சரிக்கையாக யப்பானிய இராணுவத்தினர் அவனுடைய தலையை வாளால் வெட்டுகின்றனர் என்றும் கூறப்பட்டது. அடுத்த சில வாரங்களுக்குள்ளேயே நான் செந்தாயிலிருந்து ரோக்கியோவிற்குப் புறப்பட்டுவிட்டேன். அப்படத்தை பார்த்த பின் வைத்தியக்கல்வி அத்துணை முக்கியமானதாய் எனக்குப் படவில்லை. பல வீனமுற்றுப் பின்தங்கிய ஒரு நாட்டுமக்கள் எத்துணை பலசாலிகளாயும் — ஆரோக்கியமானவராயும் இருப்பினும் பயனில்லை; பிறருக்கு எச்சரிக்கையாகப் பயன்படவோ அல்லது அர்த்தமற்ற காட்சிகளைக் கண்டுகளிக்கவேதான் அவர்கள் தகுதியுடையவராயிருப்பர். உண்மையில் அவர்களில் எத்தனை பேர் பிணியினால் இறக்கின்றனர் என்பதைப் பொருட்படுத்தவேண்டியதில்லை. அவர்களின் சிந்தனையையும் உணர்வையும் மாற்றுவதே முக்கியமானதாகும். அக்காலமுதல் அம் மாற்றத்தை உண்டாக்க வல்லது இலக்கியமே என கருதி வந்திருக்கிறேன். ரோக்கியோவில் சீன மாணவர்கள் பலர் சட்டவியல், அரசறிவியல், பௌதிகவியல் இரசாயனவியல், பொறியியல் என்பன மாத்திரமன்றிப் பொலிஸ் வேலைகூடப் பயின்றனர். ஆனால் எவராகிலும் கலை இலக்கியம் பயிலவில்லை. ஆகவே இலக்கிய இயக்கம் ஒன்றினை ஆரம்பிக்க முற்பட்டேன்; விரும்பினேன்; மிகுந்த பிரயாசைப்பட்டு சிலரைக் கண்டறிந்தேன். சில கூட்டங்களில் சர்ச்சைகள் நடத்திய பின் எமது முயற்சிக்குமுதல் தேவையாக சஞ்சிகை ஒன்று அவசியம் என்று முடிவு செய்தோம். புதுமை பிறக்கவேண்டும் என்பது எமது எண்ணமாக இருந்தபடியால் நாம் வெளியிட முனைந்த இதழுக்கு "ஷின்செங்" 'புதுவாழ்வு' எனப் பெயரிட்டோம்"

சுயசரிதைப் பாங்கில் லூசுன் கூறியுள்ளவை ஊன்றிக் கவனிக்க்வேண்டியவை. ("புனர்ஜன்மம்" "மறுமலர்ச்சி" முதலிய சொற்றொடர்களை பாரதி, வ. வே. சு. ஐயர் போன்றோர் பயன்படுத்தியதையும் நினைந்து கொள்ளக் கூடியதே.)

இவ்விடத்தில் நாம் கவனிக்க வேண்டியது என்னவெனில் ஆரம்பத்திலிருந்தே இயக்கரீதியாக லூசுன் இயங்க முற்பட்டமையாகும். மேற்கு உலகின் வழிவந்த ஒருபோக்கான அதீத தனிமனித வாதத்திலோ, புதுமையின் பெயரில் அலைமெறிந்த அதீத நவீன வாதத்திலோ அவர் தன்னைப் பறிகொடுக்கவில்லை.

## மொழிபெயர்ப்புக்கள் பெயருக்காகவோ அன்றி ரசனைக்காகவோ இருக்கக்கூடாது!

ஆரோக்கியமான புதுமையையும், புரட்சிகர நெறியையுமே அடிப்படையில் பின்பற்றுபவராக விளங்கினர்.

யப்பானிய மொழியுடன் ஜெர்மன், ரஷ்ய, ஆங்கில மொழிகளை சுமாராக அறிந்திருந்த அவர் பிறமொழிகளின் கலை—இலக்கியசெல்வங்களை சீனமொழிக்கு கொண்டு வருவதில் வாழ்நாள் முழுவதும் அயராது உழைத்தார். 1907 ஆம் ஆண்டில் மேற்கு நாட்டு "ரொமாண்டிக்" பாவனை நவிற்சிப் புலவர்களைப்பற்றி சீனமொழியில் எழுதியதிலிருந்து 1936 இல் இறக்கும்பொழுது ரஷ்ய இலக்கிய கர்த்தா கொகொல் என்பாரிவன் "உயிரற்ற ஆன்மாக்கள்" எனும் ஆக்கத்தை மொழி பெயர்த்தது வரை எண்ணற்ற பிற நாட்டு நற்கவிஞர் ஆக்கங்களை சீன மொழியில் அளித்தார். ஆனாலும் மொழிபெயர்ப்பை கண்மூடித்தனமாக அவர் மேற்கொள்ளவில்லை. உலகப் புகழ்பெற்றவர்கள் என்பதற்காக எவரையும் அவர் சீன மொழியில் பெயர்க்கவில்லை, தமது நிலையைச் சீனமக்கள் புரிந்துகொள்வதற்கு அநுசரணையாக இருக்கக்கூடிய சுயஉணர்வுக்கு உந்து சக்தியாக அமையக்கூடிய அயல் மொழி இலக்கியங்களையே அவர் சீனமொழியில் அழகொழுக அளித்தார். "கலை கலைக்காக" என்றோ "மொழி பெயர்ப்பு மொழி பெயர்ப்புக்காக" என்றோ அவர் என்னளவும் கருதியதில்லை. முக்கியமாக மூன்று வகையான அந்நிய எழுத்துக்களுக்கு அவர் முதன்மை யளித்தார். சமுதாய மறுமலர்ச்சிக்கும் மாற்றத்துக்கும் ஆக்கமும் ஊக்கமும் அளிக்கக்கூடிய இலக்கியங்கள்; சமுதாயத்தை விண்டல் செய்து அங்கதப்பாணியில் அமைந்த இலக்கியங்கள்; தேசியப் பற்றையும் எழுச்சியையும் உண்டாக்கவல்ல இலக்கியங்கள். இவையே தமது காலத்து சீன மக்களுக்கு அத்தியாவசியமானவை என்று கருதினர். அது பொருத்தமான கருத்து என்பதை வரலாறு நிரூபித்துள்ளது.

1909 இல் யப்பானில் இருந்து சீனு திரும்பிய அவர் 1926ம் ஆண்டுவரை ஆசிரியராகப் பணிபுரிந்தார். அதன் பின்னர் இறக்கும் வரையில் முழுநேர எழுத்தாளராகவே வாழ்ந்தார். லூசுன் என்பது அவரது புனைபெயர். இயற்பெயர் செளஷூரென், பழைய சீன இதிகாச—புராண — வரலாற்று இலக்கியங்களில் பாண்டித்தியமும் நிரம்பிய புலமையும் வாய்க்கப் பெற்றிருந்தமையால் போலி நவீனத்துவத்தால் அவர் ஈர்க்கப்படவில்லை. கலையின் அடிநாதத்தை அவர் ஆழமாக அறிந்திருந்தார். உலகியலை கூர்ந்து கவனித்து அவதானித்ததன் பயனாகவே படிப்படியாக இடதுசாரிப் போக்கைத் தழுவினார். சீனப் புரட்சி, கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையிலும் வழிகாட்டலிலுமே நிறைவேற்றப்படும் என்று மனதார நம்பினார். தன்னை ஓர் எழுத்தாளன் என்பதிலும் பார்க்க போராளி என்று கூறிக் கொள்வதிலேயே திருப்தி கண்டார்.

லூசுன் எளிமையான வாழ்க்கை நடத்தியது மட்டுமன்றி எப்பொழுதும் சீன மரபுவழி உடையையே அணிந்தார். மாஓ அவர்களிடம் இருந்தது போன்ற தேசிய உணர்ச்சி அவரிடம் ஆழப் பதிந்திருந்தது. அவர் சிறுகதைகள் பல எழுதினார். அவற்றில் பெரும்பாலானவை அற்புதமானவை. ஆயினும் கவிதை, கதை, என்பனவற்றை விட அவரது கட்டுரைகளே ஆற்றல் மிக்கனவாயும் பன்முகப்பட்டனவாயும் உள்ளன. அவர் படைப்புகள் எவ்வளவு சிறப்பாக இருந்தனவோ. அவ்வளவு சிறப்பு அவர் கடிதங்களுக்கும் உண்டு. குறிப்பாக இளைய தலைமுறை எழுத்தாளருக்கும் நண்பர்களுக்கும் இடைவிடாமல் கடிதங்கள் எழுதிக் கொண்டிருந்தார். அவர்களுக்கு நம்பிக்கையூட்டியும், உற்சாகம் அளித்தும் ஆக்கபூர்வமான ஆலோசனைகள் வழங்கியும், தேவையேற்படுமிடத்து காரசாரமாய்க் கண்டித்தும் தொடர்புகொண்டிருந்தார். அவரது எளிமை நேர்மை, மசியாமை, எழுத்து வன்மை முதலியன இளைய எழுத்தாளருக்கு ஆதர்ஷமாய் விளங்கின. கலை மக்களுக்காக என்று நம்பி இதயசுத்தியுடன் பணியாற்றிய லூசுன் குறித்து மாஓ ஒரு கட்டுரையில் பின்வருமாறு கூறினார்.

"லூசுன் இம்மியும் விட்டுக்கொடுக்காத கொள்கைப் பற்றுடையவர்; அண்டிப் பிழைக்கும் மனோபாவம், அடிபணியுந்தன்மை, ஆகியவற்றிலிருந்து முற்றிலும் விடுபட்டவர். காலனித்துவ அரைக் காலனித்துவ அமைப்பில் வாழும் மக்களிடையே இப்பண்புகள் மிகவும் வேண்டப்படுவன. தேசமக்களின் பெரும்பாலானோரைப் பிரதிநிதித்துவப்படுத்திக் கொண்டு எதிரியின் கோட்டையை உக்கிரமாகத் தாக்கி உடைவுண்டாக்கினார்: கலாசார முனையில் அவரே துணிவு மிக்கவராயும் சிறிதும் வழிதவறாதவராயும், எள்ளளவேனும் உறுதி குலையாதவராயும், முழுதும் நம்பிக்கைக்குரியவராயும், பற்றுர்வமிக்க தேசிய வீரராயும் திகழ்ந்தார். அவ போன்ற வீரப்பெருமகனைக் கடந்தகால வரலாற்றில் காண்பது அரிது"

சர்வ வியாபகமான மாக்சிசம்—லெனினிசத்தை சீன தேசத்தின் பௌதிக நிலைமைக்கேற்ப மாஓ அவர்களும் பிறரும் அரசியல் துறையில் சீன மயப்படுத்திய அதே மகத்தான பணியையே கலை இலக்கிய துறையில் லூசுன் செய்தார், அந்த வகையில் மாபெரும் சீனப்புரட்சியின் ஓர் அங்கமாக விளங்கினர் லூசுன். ஏகாதிபத்திய எதிர்ப்பு — ஜனநாயக உரிமைப் போராட்டம் முதலியவற்றில் ஈடுபட்டிருக்கும் இன்றைய மூன்றுவது மண்டல நாடுகளின் எழுத்தாளருக்கு லூசுன் சிறந்த வழிகாட்டியாவர்.

## லூசுன் படைப்புகளின் அடிநாதம் தேச விடுதலையே!

லூசுன் பிறமொழி இலக்கியங்களில் இருந்து வேண்டியவற்றைப் பற்றித் தனதாக்கி நவீன சீன இலக்கியத்துக்கு பங்களிப்புச் செய்ததுபோல, நாமும் லூசுன் ஆக்கங்களிலிருந்து பெறவேண்டியவற்றைப்பெற்று நமது இலக்கியத்தை வளர்ப்போமாக.

✱

# தொண்டமான்-ஜே.ஆர்.ஐக்கியம் தொழிலாளரைப் பாதுகாத்ததா?

## மலையகச் செய்திகள்

ஜனதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தன அவர்களுக்குத் தொண்டமான்மீது மிகுந்த மதிப்பு. அதேபோல் தொண்டமான் அவர்களுக்கு ஜே. ஆர்.மீது அளவற்ற விசுவாசம். பரஸ்பரம் இரண்டு தலைவர்களும் ஒருவரையொருவர் மதித்து நடந்துகொள்கிறார்கள் என்பதை எவருமே மறுத்துவிடமுடியாது. இவர்கள் இருவரினதும் ஐக்கியம் எதற்காக என்ற கேள்வியை பலதடவைகள் தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் எமது இயக்கம் எழுப்பியது மட்டுமன்றி அதற்கானவிடையையும் கூறிவந்தது. தொண்டமான் — ஜே. ஆர். ஐக்கியம் அடிப்படையில் வர்க்க ஐக்கியம் என்றும், துளியளவாவதும் தோட்டத் தொழிலாளர்களின் நலன்களை அடிப்படையாகக் கொண்டவை அல்ல என்றும் எடுத்துக்கூறி வந்தோம். இன்றைய நிலையில் நமது கூற்று மேலும் தெளிவாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தொண்டமான் ஜே.ஆர். ஐக்கியம் உண்மையில் கள்ளம் கபடமற்று தோட்டத் தொழிலாளர்களின் நலன்களுக்காகவே என்று யாராவது கூறமுற்பட்டால் அவர்களைவிட ஏமாற்றுப்பேர்வழிகள் யாரும் இருக்க முடியாது. மாதசம்பளம் ஆண்—பெண் சமசம்பளம் கடைசியாகக் கொடுத்த 70ரூபா சம்பள உயர்வு போன்ற முக்கிய பிரச்சினைகளில் ஒன்றையாவது இவர்கள் ஐக்கியத்தால் பெற்றுக்கொடுக்க முடிந்ததா? சரி அதுதான் ஒருபுறம் இருக்கட்டும்; ஒன்றுமறியாத தோட்டத் தொழிலாளர்களின்மீது இனவாத வன்செயல்கள் திட்டமிட்டே கட்டவிழ்த்துவிடப்பட்டபோது இவர்கள் இருவரினதும் ஐக்கியம் எதைச் சாதித்தது? சரி அதுதான் நடந்து போய்விட்டது. அற்பசொற்ப உடமைகளையும் இழந்து அகதிகளாக உள்ளவர்களின் புனர்வாழ்வுக்கு என்ன நடந்தது? ஐம்பதுரூபா பிச்சைக் காசு என்று பத்திரிகையில் போடப்பட்டது. ஆனால் புனர்வாழ்வுக்கு அரசும் ஜே.ஆர்.ரும் பாதிக்கப்படாத தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தில் எடுக்க உத்தேசித்துள்ளார்கள். என்னே அநியாயம். சம்பள உயர்வும் இல்லை; போதிய வேலைநாட்களும் இல்லாமல் தவிக்கின்ற தோட்டத் தொழிலாளர்களை இப்படியும் வதைக்க வேண்டுமா? இதற்குத்தான் தொண்டமானும் ஜே. ஆரும் ஐக்கியப்பட்டார்களா? இத்தகைய இலட்சணத்தில்தான் தொண்டமான் தமிழ் நாட்டில் சென்று தலைக்கு 25 பைசா கேட்டார். அதற்குத் தமிழ் நாட்டில் கிடைத்த பதில்கள் தொண்டமானை வாயடைக்கச் செய்தது.

இவற்றிலிருந்து தோட்டத் தொழிலாளர்கள் படித்துக்கொள்ளும் பாடம்தான் வர்க்க ஐக்கியம் — வர்க்க பாசம் என்பனதான் மிக முக்கியமானதும் முதன்மையானதும். இனம், மொழி பிரதேசம் என்று கூறப்படுபவை இத்தகைய உயர்வர்க்கத்தினரைப் பொறுத்தவரை வெறும் ஏமாற்றுக்களேயாகும்.

தொண்டமான் — ஜே. ஆர். ஐக்கியத்தால் இதுவரை தோட்டத் தொழிலாளர்களுக்கு எதுவும் கிடைத்துவிடவில்லை. எதிர்காலத்திலும் எதுவும் கிடைக்கப்போவதும் இல்லை.

★

---

**கங்காணி:-** தோட்டத் தொழிலாளிங்களுக்கு நிவாரணம் கொடுக்க நம்ம தலைவர் தொண்டமான் தமிழ் நாட்டிலே தலைக்கு 25 காசு கேட்டாரு; ரொம்ப சரியான யோசனைதான்.

**தொழிலாளி:-** ஓ! அதுவா! நம்ம தலைவரு இங்கே நம்மளுக்கிட்டே தலைக்கு இரண்டு ரூபா மாதா மாதம் வாங்கி வசூல்பண்ணி வாரூர்தானே. அந்த நினைப்பில்தான் அங்கேயும் கேட்டிருப்பாரு. பாவம்!

---

# மீட்சி பெற விடமாட்டீரோ!

— எஸ். வீரப்பன் —

அன்று முதலாளிவர்க்கத்தினரின் தோட்டங்களுக்கு அடிமைகளாக தொழிலாளர்கள் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டார்கள். அப்போது அடிமைகளாக இருந்த நிலையிலேயே இன்றும் தொழிலாளர்கள் இருக்கவேண்டுமென்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் விரும்புகின்றது. அதன் நயவஞ்சகப் போக்கு அதன் அரசியல் இலாபம் தேடும் போக்கு அவர்களை என்றும் தொழிலாளர்களாக வைத்து இலாபம் தேடுவதையே நோக்கமாக கொண்டுள்ளது. இலங்கையின் எந்தப் பக்கம் சென்றாலும் தோட்ட தொழிலாளர் என்னும் அடையாளத்தை இடுகின்றார்கள். அவர்களை ஏனைய சமூகங்களுடன் ஒட்டாது—சேராது - பிரித்துவைக்கின்றார்கள்.

ஒரு காலத்தில் கம்பனிகளுக்குச் சொந்தமாக இருந்த தோட்டங்கள் இன்று மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை, காணிச் சீர்திருத்தச் சபை என்றெல்லாம் மாற்றமடைந்து விட்டது. புதிய தோட்ட நிர்வாகங்கள், புதிய கிராம விஸ்தரிப்புக்கள், வீட்டுத் திட்டங்கள்போன்ற திட்டங்களினால் தொழிலாளர்களின் இருப்பிட வசதி தொழில் வாய்ப்புவசதி எல்லாம் பறிக்கப்பட்டது. அதனால் அவர்கள் நிர்க்கதியடைகின்றனர். இரண்டும்கெட்ட நிலையில் தத்தளிக்கின்றனர். இந்த நிலையை நீக்குவதற்காக பெருந்தோட்டத் தொழில்—வாடை அடிக்காத மாவட்டங்களில் தங்கள் வாழ்க்கை வசதிகளைத் தேடிக்கொள்ளச் செல்கிறார்கள். அவர்களை மோப்பம் பிடித்துக்கொண்டு ''ஏகாதிபத்தியவாதிகள் போல்'' இல. தொழிலாளர் காங்கிரஸ் செல்கின்றது. அங்கு அவர்களை தொழிலாளர்களாக கல்வியறிவற்றவர்களாக ஆக்குவதே இந்தக் இ. தொ.காவின் எண்ணம்—குறிக்கோள்.

பெருந் தோட்டங்கள் இல்லாத இடங்களில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசுக்கு ஏன் கிளைகள். சொந்தமாகக் குடியிருந்து சொந்தமாக உழைத்துச் சீவியம் செய்யும் இடங்களில் ஏன் தொழிலாளர்காங்கிரஸ்கிளை. இலங்கைப் பிரஜா உரிமை பெற்று இலங்கையில் எங்காவது இருப்பிட வசதியையும்-தொழில் வசதியையும், கல்வி வசதியையும் பெற்று ஏனைய சமூகத்தவர்களுடன் எல்லா வகையான தொடர்புகளையும் வைத்து உறவாட நினைக்கும் தொழிலாளர் வர்க்கத்தைத் தோட்டத் தொழிலாளர் என்று இனம் பிரித்துக் காட்டுவதற்காக அந்த இடங்களில் எல்லாம் சென்று கிளைகளை அமைக்கிறார்கள். இந்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரசார். இவர்களுக்கு ஏன் இந்த வேலை.

வவுனியா மாவட்டம், திருகோணமலை மாவட்டம், மட்டக்களப்பு மாவட்டம், அம்பாறை மாவட்டம், முல்லைத்தீவு மாவட்டம் போன்ற மாவட்டங்களில் குடியேறும் தோட்டத் தொழிலாளர்களுக்குச் சமூகத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்குத் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தேவையில்லை. அவர்கள் தங்கள் சொந்த மொழி

(8-ம் பக்கம் பார்க்க)

---

## உள்ளதும்! நல்லதும்!! உரையாடல் 3

**முத்தையன்:** ஆ..... வாங்க தோழரே, ஒரு கெழமையா ஒங்கள் தோட்டத்தல காணவே இல்லையே எங்க பொனீங்க.

**கண்ணையன்:** அதுங்களா ... எனக்கு இரண்டு கெழம பேனசு லீவுங்க அதனால ஏ சின்ன தங்கச்சி மரியாயி இருக்குதுள்ள அதுதான் ஏ மச்சான் சின்ன கருப்பன் அவுங்க வீட்டுல ஒரு கெழும இருந்துட்டு வந்தேன்.

**முத்:** தங்கச்சி வீட்டுல ஒரு கெழம இருந்து விருந்து முடிய வந்திருக்கீங்க.

**கண்ணை:** நன் ரெண்டு நாளுல புறப்பட்டுட்டனுய்க போன ஞாயித்தி கெழும அந்த பகுதியில கூட்டமுன்னு சொல்லிக்கிட்டாங்க ''வரலாற்று கதாநாயகர்கன்'' வருகைதரும் கூட்டமுன்னு 'பீக்கரில' சொன்னுங்க பார்த்துட்டு போவலாமென்னு இருந்தேன். தங்கச்சியும் இருந்துட்டுப் போங்கண்ணு என்னு சொல்லிச்சு.

**முத்;** அடடே அப்படியா விஷயம்

**கண்ணை:** அடபோங்க தோழரே, நானும் என்னடானு பார்த்தா நம்ம மலையக தலவரு இருக்காருள்ள தொண்டமான் அவருக்கு அப்புடியும் ஒரு பேரு.

**முத்:** பெரிய கதாநாயகர்னு நெனப்பு. விசயத்த சொல்லுங்க,

**கண்ணை:** அவுரோட இன்னு ரெண்டு பெரிய மனுசங்க வந்திருந்தாங்க. ரொம்ப நாளைக்குப்பிறகு பார்த்துட்டு வந்தேன்.

**முத்தை:** என்ன பேசுனுங்க.

**கண்ணை:** அத நெனைக்கத்தானுங்க தோழரே வயித்த எரியுது எல்லா மலையக பிரச்சினைய வுட்டுட்டு அபிவிருத்தி அபிவிருத்தின்னு அந்த சபைக்கு வக்காலத்து வாங்குனுங்க; தொழிலாளிங்களே! உழைங்க உழைங்கன்னு சொல்லுறுங்க

**முத்:** அது அப்படி சொல்லிதான் எங்களுக்கு தெரியுமா என்ன?

**கண்ணை:** செல்லசாமி சொன்ன தோட்டங்கள் கூறையாடப்படுகின்றன நாளடைவில்மூட வேண்டிவருமூன்னுசொன்னுரு: (என்ன தோழரே சிரிக்கிரீங்க)

**முத்!** அதுதான் ஜனவசம இயக்குனர் அண்ணமலை பக்கத்துல இருந்தாரே பின்ன எப்பிடி தோட்டங்கள் சூறையாடப்படும். அவர் மகன்கூட ஏதோ தோட்டத்துத் தொரைன்னு சொல்லிக்கிட்டாங்க.

**கண்ணை;** அட அதுவும் அப்படிங்களா நல்ல தமாசுங்க தோழரே. 70 ரூ: சம்பளம்குடுத்தா தோட்டங்கள் மூடவேண்டி வரும்ன்னு சொன்னுரு. ரூபா 55 சம்பளத்த நாங்கதான் வாங்கிக் குடுத்தோம்; எந்தத் தொழிற் சங்ககாரனுவது தைரியமிருந்தால் வேலைநிறுத்தம் செய்ய முடியுமா என்னு கேட்டாரு.

**முத்:** அந்த உரிமைய இல்லாம செஞ்சதே அவனுகதானே பின்னே எந்த பைத்தியகார இல்லேம்பா!

**கண்ணை:** அப்பரம் 1967 லுல 30 சதம் சம்பளம் ஒசத்தி வாங்கி குடுத்ததே இ. தொ.கா. தான்னு சொல்லி—நாங்கதான் டட்லி அரசாங்கத்துல கொழும்புல உள்ளவங்களுக்குச் சம்பளம் ஒசத்துன்ன தோட்டத்தொழிலாளிங்களுக்கும் கூட்டசொன்னோம் அப்புடின்னுரு.

**முத்:** இவங்களுக்கு இன்னும் தூங்குரவன் தொடையில கயிறு திரிக்கிறதா நெனச்சிக்குட்டு இருக்குறுங்கபோல. இன்னும் தொண்டமான் சேவல் கூவும் அப்பரம் சூரியன் உதிக்குமுன்ன காலமெல்லாம் மலையேறி இரங்கரது தெரியாது போல.

**கண்ணை:** அப்பரம் அவரே 'தோட்டத்து சாமிக்கு' கொழும்பில என்ன வேலைனு அவர் கொழும்பு தொகுதியில் தேர்தலில் நின்னப்ப கேட்டாங்களாம். அதுக்கு சாமி சொல்லுராரு மலையில தோட்டத்துலவேலை செய்யிறவனுக்கு கொழும்பில ஏன் நிற்க முடியாதுன்னுங்க. சரித்திரத்த மாத்திபுட்டாரம்;

**முத்:** சாமி கொழும்புக்குப் போயிட்டவுடனேதோட்டக்காட்டா னெல்லாம் முன்னேறிட்டான். சொகுசு வாழ்ரதா அர்த்தமா? பின்னை ஏன் 70 ரூபா சம்பளத்தகொழும்பில இருந்து வாங்கிக் கொடுக்க முடியலையாம். இதெலாம் பித்தலாட்டங்க தோழரே. இவனுங்கள சுயரூபம்நம்க்கு தெரியாதா என்ன: இன்னும் தோட்டத் தொழிலாளி 'சாமி' யோட்ட சத்தத்துக்கெல்லாம் 'ஆமாம் சாமி' போடுற மலையகமுன்னு இன்னும் நெனைக்கிருரு. அதுதான் விசயம்.

**கண்ணை:** கூட்டமும் பிரமாதமில்லிங்க கொஞ்சனங்க 70ரூபாக்குஎன்ன சொல்லுங்கன்னு வந்தாங்க அப்பரம் கலைஞ்சிட்டாங்க.

**முத்:** இனி 5 வருசத்துக்கு ஒரு தரம் எட்டி தோட்டத்த பார்ப்பாங்க. இப்போ என்ன அவசரம், இப்பதான் தோட்டத்து தொரை மாரெல்லா அவுங்கவுட்டு பிள்ளைங்களா இருக்குறுனுகளே, பின்ன எப்பிடி தோட்டம் உருப்படும்!

**கண்ணை:** அது நெசங்க தோழரே!

# நீங்காத நினைவுகள்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

## சீனக்கம்யூனிஸ்ட் கட்சியின் 60-வது ஆண்டு நினைவாக இஸ்ரேல் ஈப்ஸ்ரின் எழுதியது

தொழிலாளர்கள் வேலைத்தலத்திலிருந்து திரும்பும் போது சுவாசப்பை வெளியே வருவது போன்று இருமிக்கொண்டு செல்வதையும் நான் அடிக்கடி காண்பது உண்டு. பொதி சுமப்பவர்கள் பாரவண்டி இழுப்பவர்கள் விரைவில் சோர்வடைந்து இறந்தனர். சுமை தாங்காது மாண்டனர் என்றால் மிகையாகாது. ஒரு சமயம் மாமூட்டைகள் சரிந்த காரணத்தால் பலர் இறந்ததை நான் நேரில் கண்டேன்.

### புதிய சீனாவின் தோற்றம்

சீனாவின் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் பிரபுத்துவ ஆட்சியின்போது தமக்குக் கிடைத்த ஆயுதங்களைக் கொண்டு விவசாயிகள் அடிக்கடி கிளர்ச்சி செய்தனர் என்பது என்னவோ உண்மைதான். 1920 ஆம் ஆண்டுகளின் முற்பகுதியில் 'செவ் ஈட்டிகள்' போன்ற ஆயுதபாணி அமைப்புகள் இருந்தன. அவற்றிற்கு 'கொள்ளையர்' என்ற நாமம் ஆட்சியாளரால் சூட்டப்பட்டது! ஆனால் கம்யூனிஸ்ட் கட்சி களத்திற்கு வந்த பின்பு, குறிப்பாக மாசேதுங்கின் திடமான மார்க்சிசத் தலைமையின் கீழ், தன்னிச்சையான கிராமப்புற எதிர்ப்புகள் ஒழுங்கு படுத்தப்பட்டு காலாதிகாலப் பிரபுத்துவ அமைப்புக்கு முடிவு காணும் ஒரு உண்மையான திட்டத்தின் கீழ் ஒரு புது சீனாவின் தோற்றத்திற்கு வழி சமைக்கப்பட்டது.

என்னைப் போலவே வேறு யாரும் இரண்டாவது உலக யுத்தத்தின்போது சியாங் கைஷேக் நிர்வாகத்தின் கீழ் இருந்த பகுதிகளில் காணப்பட்ட தோல்வி மனப்பான்மை, சீரழிந்த சூழ்நிலையிலிருந்து யெஞனுக்கோ அல்லது யப்பானியர் வசமிருந்து கம்யூனிஸ்ட் தலைமையில் விடுதலை பெற்ற பகுதிகளுக்கோ சென்றால், சீன விவசாயிகளின் முழுமையான விழிப்புணர்வு என்பதற்கான சரித்திர ரீதியான அர்த்தத்தைப் புரிந்திருக்க முடியும். அங்குள்ள கிராமமக்கள் நவீன ஆயுதம் தாங்கிய கொலைகார எதிரியை எதிர்நோக்கிய போதும் தலை வணங்காது— பயப்படாது தமது சொந்தப் பலத்தில் நம்பிக்கை வைத்து தமக்கு வேண்டிய உணவுப் பதார்த்தங்களை உற்பத்தி செய்தனர். அவர்கள் பல கிராமங்கள் சின்னாபின்னப்பட்டிருந்தும் தமது சொந்த சகோதரர்கள் பிள்ளைகளைக் கொண்ட மக்கள் சேனையோடு தோளோடு தோள் நின்று போராடி யுத்தத்தாலோ அன்றி முற்றுகையாலோ வெற்றி கொள்ளப்பட முடியாதவர்கள் என்பதை நிரூபித்தனர்.

சீனமக்கள் தமது சொந்த பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள முடியாதவர்கள் என்ற கருத்துக்களை எல்லாம் இது தகர்த்தெறிந்தது.

விவசாயிகள் மத்தியில் கட்சியின் தலைமை என்பது சாராம்சத்தில் தொழிலாளி வர்க்கத்தின் தலைமை அதன் பார்வையாகும்.

சீனாவின் நகரத்துத் தொழிலாளர்கள் மத்தியில் கட்சிதான் முதலாவது தொழிற் சங்கங்களை அமைத்தது. 1920 ம் ஆரம்ப ஆண்டுகளில் சுரங்க, புகையிரத, கப்பற்போக்குவரத்து புகையிலை, புடவை போன்றனவற்றில் பெரும் வேலை நிறுத்தங்களுக்குத் தலைமை தாங்கி விவசாயிகள் ஏனைய ஜனநாயக சக்திகளுடன் பிணைப்பை ஏற்படுத்தி சீனாவின் தலைவிதியை, நிர்ணயித்த ஆயுதப் போராட்டத்துடன் சகலவிதமான நடவடிக்கைகளையும் கட்சி ஒன்றிணைத்தது. 1949 இல் இருந்து கட்சி சோஷலிச நிர்மாணத்துக்கு தலைமை தாங்கி வருகிறது. இந்தக்காலப் பகுதியில் 30 இலட்சமாக இருந்த தொழிலாளி வர்க்கம் 10 கோடியாக அதிகரித்தது.

### தொழில்நுட்ப முன்னேற்றம்

தொழில் நுட்பரீதியிலும் கைத்தொழில்ரீதியிலும் அன்றைய சீனாவின் நிலை பரிதாபத்திற்குரியது. எனது சிறுபராயக் காலத்தில் உருக்கினால் செய்யப்பட்ட அனைத்துப் பொருள்களும் பிரிட்டன் அல்லது ஜேர்மனியிலிருந்து இறக்குமதிசெய்யப்படவேண்டியிருந்தது. அன்று "அன்னிய நெருப்பு" எனப்பட்ட தீப்பெட்டி சுவீடனிலிருந்து வந்தது. மோட்டார் வாகனங்கள் பொருத்தப்படவோ செய்யப்படவோ இல்லை — அது சீனாவின் விடுதலையின் பின்பே நடைபெற்றது. இவற்றை அன்றைய சீனாவில் செய்ய முடியாது என்றோ செய்ய விரும்பவில்லையென்றோ அர்த்தமில்லை. 1870 ம் ஆண்டுகளின்பின் அடிப்படைக் கைத்தொழில்கள் ஆரம்பித்து, முறிந்து மீண்டும் ஆரம்பித்து, மீண்டும் முறிந்து கொண்டிருந்தன. ஒரு சிலராக இருந்தபோதும் தேர்ச்சிபெற்ற தொழிலாளர்கள், பயிற்றப்பட்ட பொறியியலாளர்கள் தரகு முதலாளிகள், தேசிய கைத்தொழிற் துறையை கட்டியெழுப்ப விரும்பிய தேசிய முதலாளிகளும் இருந்தனர். ஆனால் அன்னிய அரசியல் பொருளாதார ஆதிக்கத்தின் தாக்கம், பிரபுத்துவத்தின் பிடிவாதம் அத்துடன் கூடிய முடிவிலா உள்நாட்டு யுத்தங்கள் கைத்தொழில் வளர்ச்சி ஏற்படுவதைத் தோற்கடித்து வந்தன.

கம்யூனிஸ்ட் கட்சி தலைமையில் முன்னைய அமைப்பின்கீழ் பாதிக்கப்பட்ட சகல வர்க்கங்களின் குழுக்களின் ஆதரவுடன் 1949இல் புரட்சி வெற்றிபெற்றது. அதன் பின்பே கைத்தொழில் வளர்ச்சி முன்னுக்குச் சென்றது. இன்று சீனாவின் சொந்த உற்பத்தித் துறையிலிருந்து வெளிவரும் இயந்திரங்கள் கார், ராக்ரர், கப்பல், விமானம் என்பன சீனக்கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையின்கீழ் அந்த மக்கள் சாதித்தவற்றை கொண்டாடுவதற்கு மேலதிகக் காரணங்களாகும்.

நாட்டின் கைத்தொழில் உற்பத்திவிபரம் தற்போது வெளியிடப் பட்டுள்ளது புடவை உற்பத்தியானது உலகத்திலேயே மிகக் கூடியதாகும். உருக்கு உற்பத்தியானது விடுதலைக்கு முந்திய காலபகுதியுடன் ஒப்பிடுகையில் முப்பது மடங்காகும். (அத்துடன் இது பிரிட்டன், பிரான்சு அல்லது மேற்கு ஜேர்மனியைவிட அதிகமாகும்) எண்ணெய்யானது முன்பு உற்பத்தி செய்யப்படவில்லை. இன்று உலகில் எட்டாவது இடத்தில் உள்ளது. வருடந்தோறும் பல்லாயிரக்கணக்கான இலட்சக் கணக்கான மோட்டார் வாகனங்களும் ராக்ரர்களும் உற்பத்தி செய்யப்படுகின்றன. உயர் தொழில் நுட்பத்துறை பயிலும் நவசீனா சில தாக்கமான காரியங்களைச்செய்துள்ளது. யாங்சிநதி பாலம் போடப்பட்டு அணையிடப்பட்டுள்ளது. சீனநிறுவனங்களோ அன்றி அந்நிய நிறுவனங்களோ முன்பு இதைச்செய்ய முடியவில்லை. அணு, ரொக்கட்துறைகளிலும் சீனா கட்டம் கட்டமாக ஏனைய நாடுகளிலும் பார்க்க மிகவேகமாக முன்னேறியுள்ளது.

## சீனக் கம்யூனிஸ்ட் கட்சி இல்லாவிட்டால் நவ சீனம் பிறந்திருக்க முடியாது!

### சீனா செல்வதற்கு நீண்டதூரம் உண்டு

என்னைப்போல் நீண்ட நினைவுள்ளவர்களுக்கு இவை குறிப்பிடத்தக்க சாதனை. ஆனால் தனிநபர் உற்பத்தியைப் பொறுத்தமட்டில் அதன்பிரமாண்டமான சனத்தொகை காரணமாக சீனா முதற் பத்து நாடுகளிலிருந்து எங்கோ தொலைவில் உள்ளது; பெரும்பாலும் நூற்றுக்குமேற்பட்ட இடத்தில் இருக்கக்கூடும். ஒரு வளர்ச்சியடையும் நாடு என்ற வகையில் அது செல்லவேண்டிய தூரத்தை வெளிப்படுததுகிறது.

விவசாயத்தில் முன்னேற்றம் சீரற்றதாயிருந்தாலும் மொத்த உற்பத்தியானது சனத்தொகை வளர்ச்சியைத் தாண்டி 1949 ஆம் ஆண்டு உற்பத்தியின் இரட்டிப்பாகியுள்ளது. மருத்துவவசதி, கல்வி வீட்டுவசதி யாவும் முன்னிலும் பத்து அல்லது அதற்கு மேற்பட்ட மடங்கு அதிக அளவு வழங்கப்பட்டுள்ளது. இவை கட்டணமின்றியோ அல்லது மிகக்குறைந்த கட்டணத்திலோ கிடைக்கிறது.

இவை யாவற்றிலும் முன்னேற்றம் காணப்பட்ட போதிலும் அளவிலும் தரத்திலும் பற்றாக்குறை இருக்கத்தான் செய்கிறது. முன்னேற்றத்தின்போது நஷ்டங்கள் இருக்கின்றன. சீனாவின் புரட்சியானது கஷ்டங்கள், பின்னடைவுகள், தவறுகள் என்பனவற்றைக்கொண்டிருக்கவே செய்தன. ஆனால் கட்சியின் தலைமையில் இவற்றை எதிர்நோக்குவதற்குவழிகள் கண்டுபிடிக்கப்பட்டன.

### கம்யூனிஸ்ட் கட்சியும் சீனாவும்

இன்றைய உலகில் சீனாவை முக்கியத்துவப்படுத்துவதென்ன? அதன் பிரமாண்டமான அளவும் சனத்தொகையா? இவை முன்பும் இருக்கத்தான் செய்தன. அதன் பண்டைய கலாச்சாரமா? அதுவும் முன்பே இருக்கத்தான் செய்தது.

ஏனைய பெரிய சனத்தொகைகூடிய பண்டைய நாடுகளைப்போலவே இவை யாவும் சீனாவை பலவீனமான பட்டினியான உதாசீனப்படுத்தப்பட்ட காலில் கீழ் மிதிக்கப்பட்ட ஊடுருவி சுரண்டப்பட்ட நாடாக இருப்பதற்குத் தடையாக விளங்கவில்லை. ஏனையதேசங்களுடன் சமத்துவமாக சீனா நிற்கிறது என்பதை சர்வதேச அரங்கில் கவனிக்காது விட முடியாது. இதற்கான காரணம் சீனப் புரட்சியேயாகும்.

சுருங்கக்கூறினால் "சீனக் கம்யூனிஸ்ட் கட்சியில்லாவிட்டால் புதிய சீனா இருந்திருக்காது" "சோஷலிசம் மட்டுமே சீனாவைக் காப்பாற்ற முடியும்" என்பன வெறும் வார்த்தைகள் அல்ல. இவை சரித்திரத்தால் அத்தாட்சிப் படுத்தப்பட்ட உண்மைகள்.

கட்சியினதும் நாட்டினதும் எதிர்காலத்தில் நம்பிக்கை கொள்வதற்கு உண்மைநிலை படிப்பினைகளைத் தருகிறது. மனித சமுதாயத்தின் ஒரு கணிசமான பகுதியைக் கொண்டுள்ள சோஷலிச சீன மனிதசமுதாயத்தின் முன்னேற்றத்திற்கும், உலகசமாதானத்தைப் பேணுவதற்கும் அதற்குரிய பங்களிப்பினைச் செய்வதற்கும் சீனாவிடம் தகுதி உண்டென்பதிலும் எமக்கு நம்பிக்கை உண்டு.

★

# கம்பூச்சிய விடுதலைப்போர் போராடும் உலக மக்களுக்கு ஓர் வழிகாட்டி

ஒரு காலத்தில் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எதிராக வீரதீரம் நிறைந்த போராட்டங்களை நடாத்தியவர்கள் வியட்நாமிய மக்கள், அந்த மக்களின் புகழ்மிக்க போராட்டங்களால் அமெரிக்க ஏகாதிபத்தியம் தோல்வி கண்டு வியட்நாமை விட்டு வெளியேறியது. இன்று அதே வியட்நாமில் புதிய ஏகாதிபத்தியமான சமூக ஏகாதிபத்தியம் லீடுவான் கும்பலை தனது கைக்குள் வைத்துக் கொண்டு கம்பூச்சியாவின் மீது வெறித்தனமான ஆக்கிரமிப்பை வியட்நாம் துருப்புக்களைக்கொண்டே நடாத்தி வருகின்றது. இன்று கம்பூச்சியாவில் இரண்டு லட்சம் வியட்நாமிய துருப்புக்கள் ஆக்கிரமிப்பு யுத்தத்தில் ஈடுபட்டுள்ளன.

ஆக்கிரமிப்பு இடம்பெற்ற கடந்த இருவருடங்களில் கம்பூச்சியாவின் உள்நாட்டு விடுதலை யுத்த நிலைமையானது கம்பூச்சிய மக்களுக்கு சாதகமான வெற்றிகளை ஒன்றன்பின் ஒன்றாகப்பெற்று வருகின்றது. அதுபோல் வெளி உலகில் கம்பூச்சிய மக்களின் நியாயமான போராட்டங்களையும் அவர்களது ராஜதந்திர நடவடிக்கைகளை உலக மக்கள் ஆதரித்து வருகின்றனர். சர்வதேச அரங்கில் சனநாயக கம்பூச்சிய அரசாங்கமே சட்டபூர்வமான கம்பூச்சிய அரசாங்கம் என்ற நிலை வளர்ச்சிபெற்று உறுதியாக்கப்படுகின்றது. அண்மையில் ஐ. நா. சபையில் கடந்த ஆண்டுகளில் மறுக்கப்பட்டு வந்த சட்டபூர்வமான கம்பூச்சியாவின் ஆசனத்தை ஜனநாயகக் கம்பூச்சியா மீண்டும் பெற்றிக்கின்றது. இது உலக மக்களினதும் நாடுகளினதும் உறுதியான ஆதரவைத் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளது.

ஆனால் புகழ்மிக்க கம்பூச்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையின் கீழ் வீரம்மிக்க கம்பூச்சிய மக்களும், ராணுவமும் கொரில்லாப் பிரிவுகளும் சோவியத் — வியட்நாம் ஆக்கிரமிப்பாளர்க்கு அடிக்குமேல் அடிகொடுத்து வருகின்றனர். நாம்பென் தலைநகரின் ஒருசிறு பகுதியில் அரை லட்சத்திற்கு மேற்பட்ட படையினரின் பாதுகாப்போடு பொம்மை ஆட்சி நடைபெறுகின்றது. ஏனைய பகுதிகள் பெரும்பாலானவற்றில் ஜனநாயகக் கம்பூச்சிய அரசின் நிர்வாகமே நடைபெற்று வருகின்றது. ஆக்கிரமிப்பாளர்களைத் தோற்கடிக்கும் மக்கள் யுத்தம் உறுதியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

கம்பூச்சியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையின்கீழும், அதனது சரியான வழிகாட்டலின்கீழும் கம்பூச்சிய மக்கள் மேலும் ஐக்கியப்பட்டுத் தமது போராட்டத்தை முன்னெடுத்து சோவியத்—வியட்நாம் ஆக்கிரமிப்பாளர்களைத் தோற்கடிப்பார்கள் என்பதே உலகிஸ் விடுதலை விரும்பும் சகல மக்களினதும் நம்பிக்கையாகும்.

★

# சிங்களப் பேரினவாதத்திற்குப் பதில் குறுகிய தமிழ்த் தேசியவாதம் அல்ல!

பேட்டி கொடுத்வர்: எச். எல். கே. கரவிட்ட
பேட்டி கண்டவர்: செம்பதாகை நிருபர்

கேள்வி: இலங்கையிலுள்ள தமிழ் சிறுபான்மையினர் நிலை என்ன என்பதைப் பற்றிஉங்கள் கருத்தைக் கூறுவீர்களா?

பதில்: இது ஒரு பாரதூரமான பிரச்சினை. நாம் அதை உண்மை நிலையிலிருந்து கட்டாயம் பார்த்தல் வேண்டும். அதாவது இதை நாம்பெரிதுபடுத்தவோ அல்லது சிறிதுபடுத்தவோ கூடாது. சிலர் இதை அகநிலைக் கண்ணோட்டத்தில் அணுகி விடயங்களை பெரிதுபடுத்துகின்றனர் என்பதிற் சந்தேகமில்லை. இலங்கையில் இனஒதுக்கல் போன்ற ஒன்றில்லை. ஆனால் தமிழ் சிறுபான்மையினருக்கு உண்மையான மனத்தாங்கல்கள் உண்டு. இவற்றை சிறு பிரச்சினைகள் என நாம் கருதிப் பாராமுகமாக இருக்க முயற்சிக்கவில்லை.

கேள்வி: தமிழர்களுக்கு வேண்டிய அரசியலமைப்புச்சட்டரீதியான பாதுகாப்புக் கொடுத்துக் கிட்டத்தட்ட தமிழர் பிரச்சினை தீர்த்துவைக்கப்பட்டுள்ளதாக ஜெயவர்த்தன அரசாங்கம் கூறி வருகிறதே?

பதில்: தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதற்கு பிரயோசனமுள்ள நடவடிக்கை எதனையும் யூ.என்.பி அரசாங்கம் செய்துவிடவில்லை. இந்த விடயத்தில் முன்னைய அரசாங்கமும் எந்தவித பிரயோசமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. பண்டாரநாயக்கா-செல்வநாயகம் உடன்படிக்கையே இந்தப் பிரச்சினை தொடர்பாக எடுக்கப்பட்ட ஒரேயொரு பாரதூரமான முயற்சியாகும். ஆனால் யூ. என்.பி. உட்பட சில பிற்போக்குவாதிகள் இதை நாசம் செய்துவிட்டனர்.

கேள்வி: புதிய அரசியலமைப்புச்சட்டம் தமிழர்களுக்கு பாதுகாப்பளித்துள்ளதா?

பதில்: இல்லை. யூ. என். பி. யின் சில முன்னணிப் பிரமுகர்களே தமிழர்களுக்கு எதிரான வகுப்புவாத உணர்ச்சியைத் தூண்டிவிடும்போது ஒரு அரசியலமைப்புச் சட்டத்தினால் பிரயோசனம் என்ன? உங்கள் வீட்டுவாசலுக்கு காடையரும் குற்றவாளிகளும் வரும்போது அரசியலமைப்புச் சட்டத்தை அவர்கள் முன்னால் எடுத்துச் சுழட்டிக் காட்டித் தப்பித்துக்கொள்ள முடியுமா?

கேள்வி: அரசியல் அமைப்பு சட்டத்தினால் எதுவித பிரயோசனமும் இல்லை எனத் தட்டிக் கழிக்கின்றீர்களா?

பதில்: இல்லை. நாம் இன்று நிலவும் உண்மையைப் பார்ப்போம். யூ.என் பி. யின் சகலவிதமான உத்தரவாதங்கட்கு மத்தியில் யூ என்.பி. ஆட்சிக்கு வந்தபின் இரண்டு மோசமான இனக் கலவரங்கள் தலைவிரித்தாடியது. அரசியலமைப்புச் சட்டம் தமிழ் சிறுபான்மையினருக்கு உத்தரவாதமளிப் பதில் தவறிவிட்டதல்லவா?

கேள்வி: சுதந்திரத்திற்குப் பின்னர்தான் வகுப்புவாதம் தலைதூக்கியதெனவும் அன்னிய ஆட்சியின் கீழ் சிறுபான்மையினர் மிகவும் சிறப்பாக வாழ்ந்தனர் எனவும் சிலர் வாதம் செய்கிறார்களே!

பதில்: வகுப்புவாதம் சுதந்திரத்திற்கு முன்னரும் இருக்கத்தான் செய்தது ஆனால் தமிழர்கள் பாதிக்கப்பட்ட இனக்கலவரங்கள் என்பது 'சுதந்திரத்திற்குப்' பின்னரே முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. அன்னிய ஆட்சியில் தமிழர்கள் நன்றாக இருந்திருப்பார்கள் என்பது சுத்த பொய்யாகும். இனப்பிரச்சினையை தீர்த்துவைப்பதற்கு ஏகாதிபத்தியவாதிகளை அழைப்பது கரடியை விரட்டுவதற்குப் புலியை அழைத்தது போலவே முடியும்.

கேள்வி: 'சுதந்திரத்தி'ற்குப் பின் இனக்கலவரங்களுக்குத் தமிழர்கள் இலக்கானது ஏன்?

பதில்: சிங்கள வாக்குகளைப் பெறுவதற்காக முதலாளித்

## சரியான அரசியல் வழிகாட்டல் அவசியம்

துவ அரசியல்வாதிகள் சிங்களப் பெருமினவாதத்தை முழுஅளவில் முடுக்கி விட்டதை 'சுதந்திரத்தின்' பின் கண்டோம். இது ஒரு குறுகிய தேசிய வாதம். ஏகாதிபத்திய எதிர்ப்பு அன்னிய அதிக்க எதிர்ப்பு என்பதை பிரதானமாக உள்ளடக்கிய இலங்கையன் என்ற தேசியவாதம் இருக்க வேண்டுமே தவிர ஒரு சிங்கள அல்லது தமிழ்தேசியவாதமாக இருக்க முடியாது. சர்வதேசியத்துடன் இணைந்துபோகக் கூடிய ஒரு தேசியவாதமாக அது இருத்தல் வேண்டும்.

கேள்வி: இனங்களுக்கிடையே முரண்பாட்டை வளர்ப்பதில் தமிழ் அரசியல்வாதிகளும் பங்குகொண்டனரா?

பதில்: ஆம். நாற்பதாம் ஆண்டுகளில் ஐம்பதுக்கு ஐம்பது கோரிக்கை பின்னர் சமஷ்டிக் கோரிக்கை அதன் பின்பு தமிழ் ஈழக்கோரிக்கை எல்லாம் வகுப்புவாத உணர்வை தூண்டிவிட்டன, தமிழ் வாக்குகளைப் பெற்றுக்கொள்வதற்காகத் தென்னிந்திய அரசியல்வாதிகளைபோல முதலாளித்துவத் தமிழ் அரசியல்வாதிகள் தம்மைப் பாவனை செய்தனர். ஈழக்கோரிக்கை வெறுமனே ஒரு தேர்தல் விளையாட்டே. தமிழர் கூட்டணித் தலைவர்கள் உட்பட ஏகப்பட்ட தமிழ் பெரும்பான்மையினர் அதை விரும்பவில்லை. ஆனால் வகுப்புவாதப் பகைமையை விதைத்ததில் பெரும்பங்கு 1948 இல் தொடங்கி அதன்பின் மாறி மாறி வந்த அரசாங்கங்களுக்கே உரியதாகும்.

கேள்வி: ஜே. ஆர். ஜயவர்த்தனவுக்கும் த. கூ. தலைவர்களுக்குமிடையே நடைபெறும் பேச்சுவார்த்தைகள் இனப்பிரச்சினையை தணிக்க உதவுமா?

பதில்: பேச்சு வார்த்தைகள் என்னத்தைப் பற்றியது என்பது எமக்குத் தெரியாது. ஆனால் 'பாலீர் ஈஸ்ரேன் எக்கனோமிக் றிவியூ' என்ற சஞ்சிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் தமிழர்களுக்கு என்னவெல்லாம் கொடுக்க முடியுமோ அவற்றையெல்லாம் கொடுத்துவிட்டதாகவும் இதற்குமேல் கொடுப்பதற்கு எதுவுமில்லை என ஜே. ஆர். ஜயவர்த்தன கூறியிருந்தார். ஜே. ஆரின் நிலை இதுதான் என்றால் அரசாங்கத்திற்கும் த. கூட்டணிக்குமிடையே இடம்பெறும் பேச்சுவார்த்தையில் த. கூட்டணியினரிடமிருந்து அரசாங்கத்திற்கு என்ன கிடைக்குமென்பதை அறிந்துகொள்வதற்காக மட்டுமே இப்பேச்சுவார்த்தை இருக்க முடியும்.

கேள்வி: நெவில் பெர்னாண்டோ புஞ்சிநிலாமே ஆகியோருக்கு எதிராக நடவடிக்கை எடுத்ததன் மூலம் இனவாத வன்செயல்கள் பற்றிய விடயத்தில் அரசாங்கம் சரியான முறையில் செயற்பட்டுளது எனக் கருத முடியுமா?

பதில்: முதலில் அவர்கள் வகுப்புவாதத்தைத் தூண்டியமைக்காக வெளியேற்றப்பட்டுள்ளனரா என்பது தெரியாது. எவ்வாறாயினும் யூ. என். பி. வகுப்புவாத பிரகிருதிகளைக் களையவேண்டுமானால் அது உயர்மட்டத்திலிருந்து ஆரம்பிக்கப்படவேண்டும்.

கேள்வி: இந்திய வம்சாவழி தமிழர்களைப் பெருமளவில் அங்கத்தவர்களாக கொண்டதோட்டத்தொழிலாளர் சங்கம் ஒன்றின் தலைவராக இருக்கும் நீங்கள் இந்திய வம்சாவழியினர் இலங்கைத் தமிழர்களிலும் பார்க்க நல்ல நிலையில் இருக்கிறார்கள் என நினைக்கிறீர்களா?

பதில்: இந்திய வியாபார சமூகம் ஒரு சிறந்த நிலையில் இருக்கிறது. ஆனால் இந்திய வம்சாவழித் தொழிலாளர்கள் இலங்கைத் தமிழர்களிலும் பார்க்க மிக மோசமான நிலையில்தான் உள்ளனர். வாழ்நாள் முழுவதையும் இந்த நாட்டிற்கே அர்ப்பணித்த இவர்களுக்கு அடிப்படை உரிமையான பிரஜா உரிமை கூடக் கிடையாது என்பது கவனிக்கத்தக்கது.

கேள்வி: சிறிமா — சாஸ்திரி உடன்படிக்கை இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கவில்லையா?

பதில்: அது பிரச்சினையை ஓரளவுதான் தீர்த்து வைத்தது. உடன்படிக்கையை அமுல்நடாத்திய பின்பும் பெரும் எண்ணிக்கையில் நாடற்றவர்கள் இருக்கவே செய்கிறார்கள். எம்மத்தியில் நாடற்றவர்களை இந்த நாகரீக காலத்தில் கொண்டிருப்பது பெரும் அநியாயமாகும் இங்கு நிரந்தரமாக இருப்பதற்கு அக்கறையற்றவர்களைத் தவிர்ந்த ஏனைய அனைவருக்கும் இலங்கை பிரஜாவுரிமை வழங்கவேண்டும். இந்த விடயத்தில் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

கேள்வி: இ. தொ. கா. தலைவர் தொண்டமான் மந்திரிசபையில் இருப்பதால் இந்திய வம்சாவழித்

(8-ம் பக்கம் பார்க்க)

## மாவட்ட சபைகளின்.........

2-ம் பக்கத் தொடர்......

முன்னர் பதவியிலிருந்த அரசாங்கம் அணிசேரா நாடுகளின் உச்சி மாநாட்டை கொழும்பில் நடாத்தியபொழுது இன்றைய பிரதமர் எதிர்த் தரப்பிலிருந்து அநியாய செலவுகள்பற்றி குரல் எழுப்பினார். இந்த அரசாங்கத்தில் அமைச்சர்களும் அதிகாரிகளும் முறைக்கு முறை உலகம்சுற்றிய காசே உச்சி மாநாட்டுச் செலவை மிஞ்சியிருக்கவேண்டும். கடன்கள் கெஞ்சிப் பெறுவதற்காக நிதி அமைச்சர் ஏறத்தாழ ஒவ்வொரு மூன்று மாதத்துக்கு ஒருமுறை உலகம் சுற்றும் செலவுப் பணமே இலட்சக் கணக்கில் வந்திருக்க வேண்டும். இவையெல்லாம் வரி இறுப்பாளர்களின் பணத்தில்தான் செலவிடப்படுகிறது. அரசாங்கம் இலட்சக் கணக்கில் செலவு செய்யும்பொழுது சிறுகுரல் எழுப்பக் கூடியவர்களின் வாயை அடைத்து மூடத்தக்க விதத்தில் எதிர்த்தரப்பில் இருக்கும் கூட்டணித் தலைவர்களுக்கும் காலத்துக்குக் காலம் உலகம் சுற்றும் வாய்ப்பை அளித்துவிடுகிறது. இந்த அரசாங்கத்தின் பதவிக்காலத்தில் ஏறத்தாள எல்லா கூட்டணி எம்.பீ.க்களும் வெளிநாட்டுப் பயணங்களை செய்து முடித்து விட்டார்கள். இனி மாவட்ட சபைப் பிரமுகர்கள் உள்ளூர் நிர்வாகம்பற்றியும் அபிவிருத்தி பற்றியும் நேரில் அறிந்துகொள்வதற்காக யப்பான், ஜெர்மனி, அமெரிக்கா முதலிய நாடுகளுக்குப்போய்வரவேண்டியதுதான்.

கூட்டணியினருடன் பேச்சுவார்த்தைகள் என்ற போர்வையில் தமிழ் மத்தியதரவர்க்கத்தையும் முதலாளித்துவ சக்திகளையும் மட்டுமன்றி சாதாரண மக்களையும் விரைவில் நடைபெறவிருக்கும் ஜனாதிபதி, பொதுத் தேர்தல்களில் யூ என்.பி.யின் பக்கம் இழுப்பதே ஜனாதிபதியின் பிரதான நோக்கமாகும். குறிப்பாக கூட்டணியை சுதந்திரக்கட்சி அனுதாப நிலையிலிருந்து யூ. என். பி. சார்பு நிலைக்கு மாற்றுவதே ஜனாதிபதியின் தந்திரோபாயமாகும். எப்படியாகிலும் தொடர்ந்து பதவியிலிருக்கவேண்டும் என்பதையே இலட்சியமாகக் கொண்ட அமிர்தலிங்கம் கும்பல் ஜனாதிபதியின் தந்திரோபாயத்தைப் பற்றுக்கோடாகக் கொண்டிருப்பது வெளிப்படை. இதனால் மூன்றவது மண்டல நாடுகள் பல ஒரு காலத்தில் கூட்டணிபால் கொண்டிருந்தஅனுதாபத்தை கைவிட ஆரம்பித்திருப்பதாகத் தெரிகிறது. முற்போக்கான நடுநிலைநாடுகள் பல இன்றைய இலங்கை அரசை விருப்பத்துடன் நோக்கவில்லை என்பது யாவரும் அறிந்தே. ஏகாதிபத்திய வால்பிடி நாடாக இலங்கையை அமைத்துவிட்ட யூ. என். பி. யுடன் கூட்டணி உறவை வளர்ப்பது பல நாடுகளுக்கு பிடிப்பில்லை. இதனால் கூட்டணி சில அனுகூலங்களை இழக்கக்கூடும் என்று யோகேஸ்வரன் துரைரத்தினம் போன்ற இரண்டொரு நபர்கள் தலைமைக்கு அச்சம் தெரிவித்ததாகக்கூறப்படுகிறது. ஆனால் தலைவருக்கு எல்லாம் தெரியும் என்ற தோரணையில் தர்பார் நடத்தும் அமிர்தலிங்கம், "ஜனாதிபதி மிக நல்லவர்" என்ற தாரகமந்திரத்தை விடாப்பிடியாய் உச்சரித்து வருகிறார். விகடன் துக்ளக் முதலிய தென்னிந்திய வலதுசாரிசஞ்சிகைகளுக்கு அமிர் அளித்த பேட்டிகளில் ஜனாதிபதி புகழ்பாடியிருப்பது கவனிக்கக்கூடியது. "தலைவர் அவர்; அன்னவர்க்கு சரண் நாங்கள்" என்றே அமிர் இயங்குகிறார். காலத்தின் ஓட்டத்தையும் மாற்றத்தையும் அநுபவம் வாய்ந்த அமிர் கவனிக்கவில்லை என்பதில் ஐயமில்லை. அண்மையில் இந்தியாவிலிருந்து இங்கு வந்துபோன பத்திரிகை நிருபர்களும் அரசியல்வாதிகளும் கொழும்பில் தமது தூதரகத்தைச் சேர்ந்த அதிகாரிகளுடன் பேசிக்கொண்டபோது இத்தகைய கருத்துக்களையே தெரிவித்ததாக தெரியவருகிறது. மொத்தத்தில், கூட்டணியினர் ஏமாந்த நிலைக்குத் தள்ளப்படுவார்கள் என்பதே அநுபவம் நிறைந்த வெளிநாட்டு அரசியல் அவதானிகளின் அபிப்பிராயம். எத்தனை வில்சன்களும், இருச்செல்வங்களும் தோள்கொடுத்தாலும் சரிந்து கொண்டுபோகும் வியாபாரக் கூட்டணியை நெடுநாள் தாக்கிப் பிடிக்க இயலாது. ★

# உத்தமர்களின் உபதேசம் யாருக்கு?

நாட்டின் உயர் ஸ்தானங்களில் இருந்து பெரும் பெரும் புள்ளிகளால் தற்போது உபதேசங்கள் உதிர்க்கப்படுகின்றன. இன ஐக்கியம் சமூகங்களுக்கிடையில் நல்லுறவு, அன்பு, கருணை என்பனவற்றை வலியுறுத்தியும், காட்டுமிராண்டித்தனம், சக மனிதனுக்கு அநீதி விளைவித்தல், காடைத்தனம் எல்லாம் கண்டிக்கப்படுகின்றன. இவற்றை மக்கள் தொடர்புச் சாதனங்கள் பெரும் விளம்பரங்கள் கொடுத்துப் பிரசுரிக்கின்றன. இது மிக நல்ல விடயமே.

இந்த நாட்டின் சுயநல அரசியல் - அதிகாரவேட்கை, பாராளுமன்ற ஆசனங்கள் போன்றவற்றை குறுக்கு வழிகளால் அடைய விரும்பாத உண்மையான தேச பக்தர்கள் ஒருபோதும் இனத்துவேசத்தையோ அல்லது சமூகங்களுக்கிடையிலான நல்லுறவையோ சீர்குலைக்கும் நடவடிக்கைகளில் இறங்கியது கிடையாது.

ஆனால் இன்று நடக்க வேண்டியவை நடந்து முடிந்ததன் பின்புதான் உபதேசங்கள் உத்தம புத்திரர்களால் மேற்கொள்ளப் படுகின்றன. தங்களது தேவைக்காகவேண்டிய நேரத்தில் இனத்துவேசத்தைக் கிளறுவதும் அது முடிந்ததும் வேறு விதத்தில் அதே பாதிக்கப்பட்ட மக்களின் ஆதரவு தேவைப்படும் போது அனுதாபம் தெரிவித்து பெரும் உபதேசங்களை உதிர்த்து தமது உண்மையான சுயரூபங்களை மறைத்துக் கொள்வதும் நமது நாட்டில் சர்வசாதாரணமாக நடைபெற்று வந்திருக்கின்றது.

உண்மையில் இத்தகைய வேடதாரிகளின் முகமூடிகள் கிழித்தெறியப்பட்டு, அவர்களது கொடிய வர்க்க சுபாவம் மக்கள்முன் அம்பலமாக்கப் படல்வேண்டும். அப்பொழுது தான் இந்நாட்டின் தொழிலாளர்-விவசாயிகள் மற்றும் உழைக்கும் மக்கள் . அனைவரிடத்திலும், ஒரு வர்க்க ரீதியான சமூதாய மாற்றத்திற்கான அபிலாஷைகளை முன்னெடுக்க முடியும். இதை இன்றைய நிலைமைகளில் தேசிய ரீதியாக சகல இன மக்கள் மத்தியிலும் உள்ள முற்போக்கு, புரட்சிகர, தேசபக்த சக்திகள் முன்னெடுத்துச் செல்வதற்கு சகல முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும். அதுவே அவசரத் தேவையாகவும் உள்ளது.

★

## பிழை திருத்தம்

இரண்டாம் பக்கத்தின் 'கருத்தும் கண்ணோட்டமும்' பகுதியில் 5 ஆம் கலத்தில் 24 வது வரியை 4ஆம் கலத்தின் கடைசி வரியுடன் இணைத்து வாசிக்கவும்.

---

### 7-ம் பக்கத் தொடர்

தொழிலாளர்களுக்கு நன்மை ஏற்பட்டுள்ளதா?

பதில்: நிச்சயமாக இல்லை. அண்மையில் இடம்பெற்ற இனக்கலவரத்தின்போது இந்திய வம்சாவழித் தொழிலாளர்களே பிரதானமாகத் துன்புறுத்தலுக்குள்ளாகினர். மந்திரிசபையில் முன்பு இந்திய வம்சாவழியைச் சேர்ந்த எவரும் இல்லாதபோது இவர்கள் இந்தமாதிரியான மனிதாபிமானமற்ற - கோரமான அவமானத்திற்கு உள்ளாக வில்லை. தொண்டமான் ஒரு முக்கிய அங்கத்தவராகவுள்ள இந்த அரசாங்கம் இந்திய வம்சாவழி மக்களுக்கு மிகச் சாதாரணமான பாதுகாப்பைத்தானும் எடுக்கத் தவறி விட்டது.

கேள்வி: இந்தப் பிரச்சினை எவ்வாறு தீர்த்து வைக்கலாமென நினைக்கிறீர்கள்?

பதில்: இதற்கான தீர்வு ஓர் அரசியற் தீர்வாகவே இருக்க முடியும். இலங்கையின் எந்த பகுதியிலும் சிறுபான்மையினத்தவர் சமாதானமாகப் பெரும்பான்மையினரைப் போன்ற சகல உரிமைகளையும், சிறப்புரிமைகளையும் உடையவர்களாக வாழக்கூடிய உத்தரவாதத்தைவழங்கக்கூடிய அரசியல் சமூக அமைப்பைக் கொண்டிருத்தல் வேண்டும்.

கேள்வி: இந்த நிலையை ஏற்றுக்கொள்ளும் வகையில் சிங்கள மக்களை தூண்ட முடியுமா?

பதில்: ஏன் முடியாது? உலகின் ஏனைய பகுதிகளில் வாழும் மற்ற மக்களைப் போலவே சிங்கள மக்களும் அந்த நாடுகளில் சிறுபான்மை இனங்களின் பிரச்சினைக்கு இறுதியான தீர்வு காணப்பட்டு பெரும்பான்மை சமூகத்தினர் சிறுபான்மை இனத்தவர்மீது சரியான அணுகுமுறை ஏற்றுள்ள போது சிங்கள மக்கள் ஏன் அதனை பின்பற்ற முடியாது? சிங்களவர்களுக்கும், தமிழர்களுக்குமிடையே முரண்பாடு கிடையாது என்பதை நம்ப வைக்கக்கூடிய வகையில் சரியான அரசியல் வழிகாட்டல் அவர்களுக்குத் தேவை.

கேள்வி: ஏன் சகல அரசியற் கட்சிகளும் இதைச் செய்யத் தவறினர்?

பதில்: முதலாளித்துவக் கட்சிகள் இதைச் செய்யப்போவதில்லை. அவர்கள் சமுதாயத்திலுள்ள வர்க்க முரண்பாடுகளை மறைத்து ஏனைய கற்பனை முரண்பாடுகளை ஏற்படுத்தவே விரும்புவர்.

கேள்வி: இடதுசாரிக் கட்சிகள் நிலை எப்படி?

பதில்: நாடாளுமன்றத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த இடதுசாரிக் கட்சிகள் எனப்பட்டன. ஒருகாலத்தில் சிறுபான்மையினர் தொடர்பாக ஒரு சரியான நிலைப்பாட்டை கொண்டிருந்தன. ஆனால் அவையும் காலப்போக்கில் நாடாளுமன்ற சந்தர்ப்பவாதத்திற்குச் சரணடைந்து விட்டன. பாராளுமன்றப் பாதையின் அபாயம் அதுதான். வெகுஜனங்களுக்குச் சேவைசெய்ய விரும்பும் அனைவரும் ஒருகொள்கைரீதியான வளைந்துகொடாத வகுப்புவாதத்திற்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்தல் வேண்டும்.

கேள்வி: இந்த நிலைமைகளில் த. வி. கூட்டணியினருக்கும், இ. தொ. கா. விற்கும் வாக்களித்த மிகப் பெரும்பாலானவர்களான தமிழர்களை நீங்கள் எவ்வாறு குறைகூற முடியும்?

பதில்: தமிழர்கள் என்றாலும் சிங்களவர் என்றாலும் அவர்களைக் குறைகூற முடியாது. தலைமையேதான் கண்டிக்கப்படல் வேண்டும்; சரியான தலைமையைக் கொடுக்க தவறினால் மக்கள் வழிதவறி நடப்பது தவிர்க்க முடியாததேயாகும்.

கேள்வி: இந்த நிலைமையை மாற்ற முடியுமென நீங்கள் நினைக்கிறீர்களா?

பதில்: மாற்ற முடியும். நிச்சயம் மாற்றியே ஆகவேண்டும். நிலைமையை மாற்றாது விட்டால் சுரண்டும் வர்க்கங்கள் சுரண்டும் அமைப்பை நிலைபெறச்செய்வதற்காக பேரிலும் மேலும் பல்வேறு சமூகங்களுக்கிடையே குரோதங்களை ஏற்படுத்த முயற்சி எடுப்பார்கள். அப்படியானால் சிங்கள மக்களுக்கும் சரி, தமிழ் மக்களுக்கும் சரி எதிர்காலம் இருக்காது. மாக்சிசம் — லெனினிசத்தின் அடிப்படையில் இயங்கும் ஒரு சக்திமிக்க தொழிலாளிவர்க்க கட்சியைக்கட்டி வளர்ப்பதன் மூலமே இந்த நிலையை மாற்றியமைக்க முடியும். இதைத்தவிர வேறு வழியில்லை. ★

### 5-ம் பக்கத் தொடர்

யிலேயே பேசி தங்கள் வேலையைச் செய்து கொள்ள முடியும். அலுவலகங்களில் கடமை செய்பவர்களுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ள முடியும். அவர்களின் பிரச்சினைகளை அவர்களே நிவிர்த்தி செய்துகொள்ள முடியும்..

இலங்கைத்தொழிலாளர் காங்கிரஸ் தோட்ட தொழிலாளர்களை மீட்சிபெற்விடாதோ என்று தொழிலாளர் ஏங்குகின்றனர். இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்வவுனியா, மட்டக்களப்புபோன்றவிடங்களில் தனது கிளைகளை அமைத்திருக்கின்றது. தொழிலாளர்களைக் கிளையில் சேர்ப்பதற்கு வலைவீசுகிறது. தனது சங்கத்திற்கு நிதிதேட முயல்கின்றது; அரசியல் இலாபம் தேட முயல்கின்றது; அவர்களைக் கல்வியறிவு இல்லாதவர்களாக்கி அனுபவம் இல்லாதவர்களாக்கிப் பிரதிநிதிகளைத் தேடி அலையவைக்கும் ஒரு அமைப்பையே உருவாக்கி நிலைநிறுத்த முயல்கின்றது. மலையகத்தில் ஒரு சிறிய வேலையைச் செய்வதற்கும் தொழிற்சங்க பிரதிநிதிகளைத் தேடி செல்வதைப் போன்ற ஒரு பழக்கதோஷத்தை இந்த இலங்கைத்தொழிலாளர் காங்கிரஸ் ஏனைய மாவட்டங்களிலும் உருவாக்கியுள்ளது — உருவாக்கமுயல்கின்றது. இவ்வாறான ஒரு செயலை இதுவரை காலமும் எந்தத்தொழிற்சங்கமும் செய்யவில்லை. வேறு எந்ததொழிற்சங்கங்களும் வெளி மாவட்டங்களில் போய் இவர்கள் தோட்டத்தொழிலாளர் என்னும் வேலிபோட்டுக்கொடுக்கவில்லை மலைநாட்டுத் தொழிலாளர் வர்க்கம் என்று பிரித்துக் காட்டவில்லை. ஏன் இந்தத் தொழிற்சங்கத்திற்கு மட்டும் இந்த வேலை. தனது சங்கம் நிலைத்து நிற்க கல்வி அறிவில்லாத — அனுபவம் இல்லாத சமுதாயம் எந்தக் காலத்திலும் இருக்கவேண்டுமென்று விரும்புகின்றது. இலங்கையில் மற்றச் சமூகங்களுடன் தொடர்பு கொள்ளாத கூட்டத்தைத் தன்பக்கம் வைத்திருக்க முயல்கின்றது.

### 3-ம் பக்கத் தொடர்

வர்க்க—சுகபோக வாழ்வுக்கு உத்தரவாதம் கிடைத்தால், அவற்றின் நலன்கள் கவனிக்கப்பட்டால் எதையும் விட்டு கொடுக்கவும் 'தியாகம்' செய்யவும் தயங்காதவர்கள் தமிழ்த் தலைவர்கள். இது வரலாறு காட்டி வந்துள்ள உண்மை. இதிலிருந்து பாடம் படிக்கவேண்டிய அவசியம் அவர்களுக்கு இல்லை. உண்மையில் பாடம் படிக்கவேண்டியது அவர்களால் ஏமாற்றப்பட்டு, திசை திருப்பப்பட்டு வந்துள்ள சாதாரண உழைக்கும் தமிழ் மக்களேயாவர்.

அதேவேளை எந்தக்கொள்கைகளும், கோரிக்கைகளும் நாட்டின் யதார்த்த நிலைமைகளிலிருந்தும் ஏகப்பெருவாரியான மக்களின் நலன்களிலிருந்தும்தான் உருவாக்கப் படவேண்டுமேயன்றி வெறும் உணர்ச்சிவசப்பட்ட ஒரு சிறு பகுதியினரின் நலன்களிலிருந்து உருவாக்கப்படக் கூடாது. நாட்டின் யதார்த்த நிலைமைகளிலிருந்து மக்களின் உண்மையான நலன்களுக்கான எந்தக் கோரிக்கையும் ஒருபோதும் தோல்வி காண மாட்டாது. அது பலதடைகளையும்மீறி வெற்றிபெற்றே ஆகும். இந்தவரலாற்று உண்மையை தமிழ்மக்களும் கற்றுக்கொள்வது அவசியமேயாகும்.

---

## ராணிக்கு ராஜ உபசாரம்

### 1-ம் பக்கத் தொடர்

எமது நாட்டை அடிமைப் படுத்தி வைத்திருந்த நாட்டின் தலைவி என்பதே வித்தியாசம்.

விக்ரோறியா திட்டத்திற்கு பிருத்தானியா அன்பளிப்பு செய்தமையினால் மகாராணிக்கு பெரும் இராஜ உபசாரம் நடாத்த வேண்டும் என சிலர் வாதம் செய்கின்றார்கள். பிரித்தானியாவின் இந்த மாதிரியான பெருந்தன்மை என்பது வெறும் ஏமாற்று மட்டுமே. இது நாணயத்தின் ஒரு பக்கத்தை மட்டுமே காட்டுகிறது. ஒரு நூற்றாண்டுக்கு மேலாக காலனி ஆட்சியின் கீழ் இலங்கையில் இருந்து பிரித்தானியர் கொள்ளையிட்டுச் சென்றவற்றின் பெறுமதிதான் என்ன? பிரித்தானியரால் இன்று எமக்கு வழங்கப்பட்டுள்ள உதவியானது அந்தக் காலத்தில் நம்மிடமிருந்து அவர்கள் கொள்ளையடித்துச் சென்றவற்றின் ஒரு வீதந்தானும் இருக்குமா என்பது சந்தேகமே.

ஆதிகாலத்தில் ஆட்சியாளர் பாணைக் கொடுத்து, களியாட்டம் நடாத்தி மக்களைச் சந்தோஷமாக வைத்திருக்க முயன்றனர். அது நீண்ட காலத்திற்கு முன்பு உலகத்தின் வேறு ஒரு புறத்தில். ஆனால் இன்று மிகவும் விழிப்புற்ற உலகத்தில் யூ.என்.பி-அரசாங்கம் பாணைக் கொடுக்காது கேளிக்கைகளில் மட்டும் மக்களை மயங்கச் செய்யப்பார்க்கிறது.

மகாராணி இலங்கைக்கு விஜயம் செய்வது இதுதான் முதல்தடவையல்ல. 1955 ம் ஆண்டு அவர் இலங்கைக்கு வந்தபோது அப்போதைய யூ.என்.பி. அரசாங்கம்சொல்லுக்கேற்ற அளவில் விருந்தாளியைக் கௌரவித்தது. பெரும் வரவேற்பு ஒன்றினால் இந்த நாட்டில் எல்லாம் நன்று இருக்கிறது என மக்கள் நம்பிவிடுவார்கள் என்று யூ. என். பி. நினைத்திருந்தது. ஆனால் அதைத் தொடர்ந்துதான் 1956ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் யூ. என். பிக்கு என்ன கதி ஏற்பட்டது என்பது எங்கள் எல்லாருக்கும் தெரியும். அன்றைய சிந்தனையில் இருந்து யூ.என். பி. இன்னும் மீளவில்லை என்பதையே அதன் செய்கைகள் காட்டுகின்றன.

எத்தனை வகையான ஏமாற்று நாடகங்களை யூ. என். பி. நடத்தினாலும் அதன் உண்மையான தோற்றத்தை மக்கள் ஏற்கனவே தெரிந்துவிட்டார்கள். ★

### 1-ம் பக்கத் தொடர்

டார்கள் என்றால் அது அவர்களது விட்டுக் கொடுக்காத போராட்டத்தினால் மட்டுமே என்பதே உண்மையாகும்.

'சாதியும் தீண்டாமையும் பல நூறு வருடங்கள் பழமை வாய்ந்த ஒரு சமூகப் பிரச்சினையாகும். அடிப்படையில் இது ஒரு வர்க்கப் பிரச்சினையாகும். உலகில் உள்ள எந்தவொரு பிரச்சினைக்கும் மதம் இதுவரை பரிகாரமாக அமையவில்லை, அதேவேளை சமூக ஏற்றத்தாழ்வுகளையும், சாதி தீண்டாமை போன்றவற்றையும் எல்லா மதங்களும் வெவ்வேறு அளவுகளில் மறைமுகமாகவும் வெளிப்படையாகவும் அங்கீகரித்தே வந்துள்ளன. அப்படி இருக்க சாதிக்கும் தீண்டாமைக்கும், மதம் விட்டு மதம் மாறுவது ஒரு பரிகாரமாக ஒரு போதும் அமையமாட்டாது.

ஆதலால் தீண்டாமை-சாதி முறைக்கு சரியான பதில் தாழ்த்தப்பட்ட மக்களும், ஏனைய முற்போக்கு நல்லெண்ணம்கொண்ட சகலரும் ஐக்கியப்பட்டு கடந்த காலங்களில் எவ்வாறான போராட்டங்களை முன்னெடுத்து வெற்றி பெற்றார்களோ அதே வழிதான் இன்றும் தெளிவாக உள்ளது. அந்த வழியை மறைக்க சில பிற்போக்குவாதிகளும், சில சுயநலத் துரோகிகளும் எவ்வளவு முயன்றாலும் மிகக் குறுகிய காலத்தில் மீண்டும் தமது பயணத்தை மக்கள் அந்த வழியில் தொடருவார்கள் என்பதில் எமக்கு நம்பிக்கையுண்டு.

அச்சுப்பதிப்பு: யாழ்ப்பாண அச்சகம் 407, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம். வெளியீடு: சி. நவரத்தினம் 15/1, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.